'' அன்பு அறிவு அகமகிழ்வோடு
இன்புற்றிருப்போம் எல்லோரும்''

# சுந்தரன்

கலை, இலக்கிய, சமூக ஏடு
மலர் - 1 - 1998 சித்திரை முழுமதி.



ஏனோ தானோ என்றல்ல

# வினோ நகைப் பூங்கா

உங்களை மானோ மயிலோ என

தங்கத்தால் மயங்கவைக்கும்

## வினோ
## நகைப் பூங்கா





## VINO
## NAKAI POONKA

185, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

185, Kasthuriar Road,
Jaffna.



# மனமுற்றம்

விதி தெரிந்த நாள் முதல்
விதி நிறைந்த நாள் வரை
தன் விரலிடுக்குக்குள் செருகிய
பேனா முனை மூலம்
தன் வாழ்நாள் முழுவதையும்
இந்த மண்ணிற்காய் எழுதி முடித்த
உத்தமம் நிறைந்த ஒரு மனிதர்
''சிரித்திரன்'' சுந்தர் அவர்கள்.

தமிழனாய்ப் பிறந்து
அவரை அறியாத
அவர் அறியாத மானிடமே இருக்கமுடியாது!
சுந்தர் அவர்களின்
மின்னல் வார்த்தைகள்
சுள்ளென்று ஏறும் நெஞ்சுக்குள்.
அச்சொற்களைக் கீறினால்
இரத்தம் சொட்டும் –,
என்றும் உயிருள்ளவை!

வெறும் கீறல்களெல்லாம்
அந்த விரல்களால் விலாசம் பெற்றன!

நல்லவற்றை நல்லவர்களை
வாழ்த்தி ஏத்தியது அந்தக்கை.
சமூகத்தை கெடுப்போரை
இயன்றவரை தீயிலிட்டது:

மனிதத்தின் மூளையை
இதயத்தின் துடிப்போடு இணைக்க முயன்றது.

மக்களின் வயிற்றெரிவுகளை
இலாபமாக்கி தன் வீட்டுக்குள் மூட்டும்
பதுக்கல் வியாபாரிகளை
நரகத்தில் ஒப்படைத்து சிதைபட வதைத்தது
(காட்டூன் மூலம்)

இந்த சமூகத்தின் சாக்கடைகளை
புனிதப்படுத்த முயன்ற அந்தக் கைக்கு
காலம் கொடுத்த பரிசு
பாரிசவாதம்.

பாரிசவாதத்தால், வலக்கையின்
விரல்களுக்குத்தான் விலங்கிட முடிந்தது:

அங்கவீனங்களால்
அழிந்துபோவது வெறும் ஜடங்கள்தான்.
நெஞ்சின் உரமாக இடக்கை எழுந்தது

அந்த உயிருக்குள் உயிர் வந்தது.
எழுத்து எழுந்து நின்றது:
ஆனால்
காலம் அதை நீடிக்கவிடவில்லை:

மண்ணின் அனர்த்தங்களும்
நம் மக்களின் அவலங்களும்
நம் தேசத்தையே கண்ணீரால் நனைத்தபோது
சிரித்திரனின் சுந்தரச் சிரிப்பையும் இழந்தோம்.

இந்த சமூகத்திற்கு
ஒரு மனிதனை மகானாக
வாழவிடுத்த பெருமை
அவரின் துணைவியாரைச் சாரும்.
இறுதிவரை அவர் எழுதிய
பேனாவின் ஊற்று
அந்த அன்னையின்
அர்ப்பணிப்புத்தான்.

சுந்தரையும்
அவரோடு இணைந்த 'சிரித்திரனை'யும்
இணைத்து சுந்தரனாக்கி
அவர் ஞாபகார்த்தமாக
அவர்தாழ் வணங்கி
அப்பாதங்களுக்கே காணிக்கையாக
உங்கள் கைகளில் வழங்குகின்றோம்!
ஏற்றுக் கொள்வீர்கள் என்ற நம்பிக்கையோடு
அவர் பணியின்
ஒரு பகுதியையாயினும் தொடரமுயல்கிறோம்
உங்கள் நல்லாதரவுடன்!

# பாசம்



குஞ்சு பொரித்ததன்பின் கோழிக்குத் தூக்கமில்லை!
பஞ்சு முகில்களைப் போல்...
பார்க்கத் துடிதுடிப்பும்,
அஞ்சாமல் திரியும் அனாயசமும் கொண்டசிறு
குஞ்சுகளால்
பெற்றெடுத்த கோழிக்குத் தூக்கமில்லை!
நீளக் கிடக்கின்ற நிலம்மீதில் தீன்பொறுக்கக்
கோழி செல்லும்;
குஞ்செல்லாம் குசுகுசுத்து அணிவகுக்கும்.
நெல்லின் மணியென்றோர் நிறக்கல்லைக் கண்டோடி
பிள்ளை வழிதவறின்....
பெற்றதாய்க்குத் தலையிடிதான்.
சுற்றும் பருந்துகளும்,
தோட்டத்தில் காவல்நிற்கும்
பெட்டை நாய், பூனைகளும் பிடித்துண்ண ஏங்குவதை,
கண்டால்--- அயற்சேவல்
கொத்திக் கலைப்பதனை,
கொஞ்சம் அயர்ந்தால் கொடும்புடையன் கவர்வதனை
ராவினிலே.....
குஞ்சுகளை இரகசியமாய்ப் பார்க்காட்டில்
மோப்பம் பிடித்து மரநாய்கொண் டோடுவதை,
நன்குணர்ந்த கோழிக்குப் பயம்வருந்தான்!
முன்பொருநாள்
குஞ்சு தொலைந்தபின்னர்
குருதிதோய்ந்த செட்டையையே
வீதியினில் கண்டு 'விசயம் அறிந்த' அந்தப்
பறக்கத் தெரியாத தாய்க்கோழி....
கவனமுடன்
சிறகுக்குள் தன் குஞ்சுகளைச் சிறைவைக்கும்!
தன்மடியில்
நெருப்பினைக் கட்டியொவ்வோர்
நிமிசமும் பதை பதைக்கும்.
உறங்காமல் பொத்தி உணவூட்டும்!
''இதை நினையாது'' ...
''பறக்க விடு'' என்று பயமறியாக் குஞ்செல்லாம்
குரலெடுத்தால்.....
நிதம் அந்தக் கோழிக்கோ.....
உயிர் போகும்!

- த. ஜெயசீலன் -

கெட்ட எண்ணங்களை அகற்றினால் அன்பு பிறக்கும். அந்த அன்பினால் ஆண்டவனைத் தேடும்போது அவன் எளிதில் கிடைக்கிறான். உங்கள் உள்ளமும் தூய்மை பெறுகிறது. - ஜேம்ஸ் அலன்

# அவ (ர்) மதிப்பு

ஒருகிராமத்தின் வழியாக புத்தர் சென்ற போது அவ்வூர் மக்கள் அவரை அவமதித்து மிகவும் மோசமாக ஏசிக்கொண்டிருந்தனர்.

அவற்றையெல்லம் அமைதியாகக் கேட்ட புத்தர் ''நீங்கள் இன்னும் ஏதாவது கூற விரும்பு கிறீர்களா? ஏனென்றால் அடுத்த கிராமத்திற்கு நான்குறிப்பிட்ட நேரத்திற்குப் போகவேண்டும். அங்கு எனக்காக பலர் காத்திருப்பார்கள். தாங்கள் வேறுஏதேனும் கூறவேண்டியிருந்தால் நான் மீண்டும் இவ்வழியால் திரும்ப வரும்போது நீங்கள் சொல்ல வேண்டியதையெல்லாம் சொல் லலர்ம் என்றார்.

அவ்வூர் மக்கள் ஆச்சரியத்துடன் ''நாங்கள் ஏதோ ஒன்றை உங்களிடம் சொல்லவில்லை. உங்களை அவமானப்படுத்திக் கொண்டல்லவா இருக்கிறோம்'' என்றனர்.

புத்தர் சிரித்தார் '' என்னை அவமானப் படுத்த நீங்கள் கொஞ்சக் காலம் தாழ்த்திவந்து விட்டீர்கள். குறைந்தது பத்து ஆண்டுகளுக்கு முன்வந்திருக்கவேண்டும். நான் இப்போது அந்தளவுக்கு முட்டாள் அல்ல· ''நீங்கள் என்னை அவமானப்படுத்துங்கள் அது உங்களுக்கு உள்ள சுதந்திரம் ஆனால் அதை ஏற்றுக் கொள்வதும், ஏற்றுக்கொள்ளாததும் எனது சுதந்திரம்· இப் போது அதை நான் ஏற்றுக் கொள்ளவில்லை என்றார்.

மேலும் அவர் கூறினார். உங்களது கிராமத் திற்கு வரும் முன்பு வேறு ஒரு கிராமத்தை கடந்து வந்தேன். அங்குள்ள மக்கள் எனக்கு தருவதற்காக இனிப்புகள் கொண்டுவந்திருந் தனர். அவர்களுக்கு நான் நன்றி கூறி நான் இனிப்புக்கள் உண்பதில்லை என்று அவற்றை ஏற்கமறுத்துவிட்டேன். எனவே அவர்கள் என்ன செய்திருப்பார்கள் என்று நீங்கள் நினைக் கிறீர்கள்.

## ( குட்டிக்கதை )

அதற்கு கூட்டத்திலிருந்த ஒருவர் ''அவர்கள் அதனை திருப்பி வீட்டிற்கு எடுத்துச்சென்றிருப் பார்கள்'' என்றார்.

உடனே புத்தர் இப்போது நீங்கள் என்ன செய்வீர்கள்? எனக்கு ஏற்படுத்திய அவமானங் களை இப்போது நீங்களும் திரும்ப வீட்டிற்கு எடுத்துச் செல்ல வேண்டியதுதான். நான் உங்களது அவமதிப்புகளை ஏற்றுக் கொள்ள வில்லை. வேறு வழியில்லை நீங்கள் அவைகளை எடுத்துச் செல்லவேண்டியதுதான்! என்று கூறினார்.

- ரிஷி ஓஷோ

ஓர் ஆதங்கமான செய்தி-அமெரிக்கா வில் மொத்தம் 16 கோடியே 80 இலட் சம் ரெலிபோன்கள் உள்ளன அதா வது 100 வீடுகளில், 96 வீடுகளுக்கு தொலைபேசி வசதி உண்டு. இங்கே ஒரு 'ஹலோ' சொல்ல எத்தனை கிலோமீற்றர் செல்லவேண்டும், மணிக் கணக்கில் தூங்கவேண்டும்.

இந்த மனிதர்களுக்கு பைத்தியம்பிடித்துவிட் டால் தற்கொலை செய்து கொள்கிறார் கள்·சிலர் கலியாணம் செய்து கொள்கிறார் கள்.

- யாரோ

# குடிநிலம்

கே. ஆர். டேவிட்

"நான் பிறந்து, தவழ்ந்து, நடந்த அந்த மண் இப்பவும் என்னோடை ஒட்டிக்கொண்டிருக்கு" இப்படிக் கூறியவள் காலை மடக்கி குதிக்கால் பகுதியைக் காட்டுகிறாள்..

வெள்ளரிப்பழம் வெடித்துப் பிளந்ததுபோல், பிளந்திருக்கும் பித்தவெடிப்புக்குள் புத்தூர் சிவந்தமண் வரம்புபோல் படிந்து கிடக்கின்றது !

- சிறுகதை -

இடுகினால் மறைக்கப்பட்டு, நெருப்புப் பெட்டி, போன்ற மிகச் சிறிய அறையினுள் இது வரை படுத்திருந்த யோகேஸ்வரி வெளியே வருகிறாள்

பிற்பகல் நாலரைமணிக்கு மேலிருக்கும்.

வெளியே வந்தவள் கயிறுபோல் திரிபட்டிருந்த மார்புச் சீலையைச் சரிசெய்து கொண்டு, அந்தநாவல் மரத்தடிக்கு வந்து, நிலத்தைக் காலால் தட்டி துப்பரவு செய்துவிட்டு அமர்கிறாள்

வழமையைவிட இன்று அவளது முகம் வாடிப்போயிருக்கிறது.

நாவல் மரத்தடியில் பலர் அமர்ந்திருக்கின்றனர். அனைவரும் இடம் பெயர்ந்து வந்தவர்கள்.

இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன் தன்னிச்சையாக இந்த மண்ணில் முளைத்து, சுதந்திரமாக வளர்ந்து, பெருங்கிளைபரப்பி நிமிர்ந்து நிற்கிறது அந்த நாவல் மரம். மரங்களுக்கும் அரசியல் இருந்திருந்தால் இன்று இந்த நாவல்மரமும் இந்த மண்ணில் அகதியாய் அவலப்பட்டு ஏதோவொரு மூலையில் கிடந்திருக்கும்.

"பரமண்டலங்களிலே இருக்கிற எங்கள் பிதாவே உம்முடைய இராட்சியம் வருக" நாவல் மரத்தடியிலிருந்து கிட்டத்தட்ட இருபத்தைந்துயார் தூரத்தில் அமைந்திருக்கும் லூர்த்து மாதா தேவாலயத்துள் நடக்கின்ற இடம் பெயர்ந்து வந்த மக்களின் செபவழிபாடு தெளிவாகக் கேட்கின்றது.

மிகப்பெரியதொரு விருட்சத்தை, அதன் மயிர்வேர் கூட அறுந்துவிடாமல் பிடுங்கி எறிந்தது போன்ற இடப்பெயர்வு அந்த இடப் பெயர்வின் அவலங்களுக்குள்ளாகி; திசை தெரியாமல் ஓடி எப்படியோ இங்குவந்து தேவாலயத்துள் தஞ்சம் புகுந்த மக்கள் துன்பமற்ற நிரந்தர மகிழ்ச்சியுள்ள 'இறையரசை' வேண்டுகின்றனர்!

மட்டுவில் கிராமத்தைத் திசைகாட்டி நிற்கும் ஆரோக்கியவாச மருத்துவமனை; இந்த மருத்துவமனையிலிருந்து குறுக்கால் பார்த்தால் ஏறத்தாழ நூறு யார் தூரத்தில் இத்தேவாலயம் அமைந்துள்ளது. இத்தேவாலயத்தின் பின்பக்கமாகவுள்ள நிலத்தில் இத்தேவாலயப்பாதிரியாரால், இடம் பெயர்ந்தவர்களுக்கென போடப்பட்டுள்ள நீண்ட கொட்டிலின் ஒரு பகுதியில் தான் யோகேஸ்வரி குடும்பத்தினர் இருக்கின்றனர்.

நாவல்மரத்தடியில் இருந்த யோகேஸ்வரி என்னத்தை நினைத்துக்கொண்டாளோ மூத்த மகளைக் கூப்பிட்டு, தனக்கு முன்னால் இருத்தி பின்னப்பட்டிருந்த அவளது கூந்தலைக், குலைத்து, பேன் பார்க்க ஆரம்பிக்கிறாள்.

மூத்தமகள் யசோதா... இவளுக்கு மிகவும் குட்டையான, சுருண்ட அடர்த்தியான கேசம் யோகேஸ்வரியின் கைவிரல்கள் நண்டுக்கால் போல் யசோதாவின் தலையில் நகர்ந்து உச்சி பிரிக்க பார்வைக்கூர் பேன்பூச்சியைத் தேடு கின்றன.

யோகேஸ்வரியின் கவனம் முழுவதும் யசோ தாவின் தலைமீது பதிந்திருந்தாலும், அங்கு குழுமியிருப்பவர்களின் பேச்சுக்களையும் ஒட்டுத் தாள்போல் மனதில் பதித்துக் கொள்ளவும் தவறவில்லை.

எல்லா மரங்களும் பூத்திருக்கும். வாறத்துக்கு முதல்நாள்தான் கிண்டி பசளை போட்டனாங் கள். நாங்கள் வீட்டைவிட்டு வெளிக்கிட்டு ஒண்டரைமாதமாய்ப்போச்சு இப்ப என்ன பாடோ... ஆடுமாடுகடிச்சுதோ... எப்பவீட்டை போகப்போறமோ! புஸ்பா வேதனையோடு கூறிக்கொள்கிறாள். புஸ்பா ஒரு சங்கீத ஆசிரியை நாவலர் வீதியில் மனோகராத் தியேட்டருக்கு அருகில் வசதியான ஒரு வீட்டில் வாழ்ந்து வந்தவள்... இப்போது ?

பேன் பார்த்துக்கொண்டிருந்த யோகேஸ் வரி இலேசாகத் தலையைத் திருப்பி புஸ்பாவை



பரமேஸ்வரி, தனலட்சுமி, புஸ்பா, செல் லம்மா வழமையாக அந்த மரத்தடிக்கு வரு கின்ற அனைவரும் இருக்கின்றனர்.

• எங்கடைவீட்டு முத்தத்திலை எல்லாவித மான றோசாமரங்களும் நிக்கிது. இந்தமுறை

யும், அங்கு கூடியிருந்தவர்களையும் பார்க் கின்றாள். கண்குழிச்சதைக்குள் உருள்கின்ற வெள்ளை முழியில் உள்ள கண்மணியிலிருந்து பிறக்கின்றபார்வைக்கோடுகளில் எத்தனையோ உணர்வுகள் துடிக்கின்றன. அவளது முகத்தில் நிரந்தரமாக அமைந்துள்ளன... நிரந்தரமெழு

றால்; இடப்பெயர்வின் பின் ஏற்பட்டு இன்று வரை மாறாமல் இருக்கின்ற விரக்தி உணர்வுக்கு மேல் ஏளன உணர்வுதிரையிடுகின்றது. உதடுகள் பிரியாத நிலையில் மொட்டான ஒரு ஏளனச் சிரிப்பு... திரும்பவும் பேன் எடுப்பதில் ஈடுபடு கின்றாள்.

யோகேஸ்வரியை முன்பின்தெரியாதவர்கள் பார்த்தாலும், அவளது முகத்திலுள்ள விரக்தி உணர்வை இலேசாகப்புரிந்து கொள்வர் .. அவ் வளவிற்கு அவளது முகத்தில் விரக்தி உணர்வு பிரதிபலிக்கின்றது!

அதற்கான காரணம் ...? புரியாதபுதிர்!

யோகேஸ்வரி பெருவாழ்க்கை வாழ்ந்தவ ளல்ல... ஆண்டியாக வாழ்ந்தவள், இடப்பெயர் வின் பின் ஓட்டாண்டியாக வாழ்கின்றாள்! உயிரையும், சில இந்த உறவுகளையும் விட இழப்பதற்கு எதுவும் இல்லாதவள் அப்படிப் பட்ட இவளுக்கும் ஜீரணிக்கமுடியாத ஏதோ வொரு இழப்பு ஏற்பட்டுவிட்டது!

இதைப்பற்றி இதுவரை யாரும் அவளிடம் கேட்டதும் இல்லை, அவளாக யாருக்கும் கூறியது மில்லை!

யோகேஸ்வரி:-

புத்தூரைப்பிறப்பிடமாகக் கொண்டவள், அவளது வாழ்க்கையில் அவள் எழுதிய மிகப் பெரிய பரீட்சை யென்றால் எட்டாம்வகுப்பு - வகுப்பேற்றப்பரீட்சைதான்! அதில் அவள் சித்தி யடைந்தாளோ - இல்லையோ .. அதற்குப்பிறகு அவள் பாடசாலைக்குப் போகவில்லை! இரைப்பை வேக்காட்டைத்தணிக்க புத்தூர்செம் மண்ணோடு போராடியது அவள் குடும்பம் ...

> சிப்பாய் ஒருவன் துப்பாக்கியைப் போற்றுவது போலவும்
> இசைக்கலைஞன் வீணையைப் போற்றுவது போலவும்
> பெண் தன் கணவனைப் போற்றுகிறாள்.
> - பேர்ணாட்ஷா

அந்தமண் அவர்களை வஞ்சிக்கவில்லை, அவர்களின் இரைப்பை நிறைந்ததோ - இல் லையோ. இரைப்பை வேக்காடு ஓரளவு தணிந்தது!

## கறுப்பு யேசுநாதர்


- கவிதை -

இயேசுவானவர்
ஒரு கறுப்பனாக திரும்பிவருவாரானால்
அது நல்லதல்ல
அவர் சென்று பிரார்த்தனை செய்யமுடியாத
தேவாலயங்கள்
இங்கு ஏராளமாய் உள்ளன.
எவ்வளவு புனிதப்படுத்தப்பட்டாலும்
நீக்ரோக்களுக்கு
அங்கே வாயில்கள் மறுக்கப்படும்.
அங்கே இனம்தான் பெரியதே தவிர
சமயம் அல்ல,
ஆனால்
இதைமட்டும் உறுதியாகச் சொல்லலாம்
இயேசுவே!
நீர்
நிட்சயமாக
மீண்டும்
சிலுவையில் அறையப்படுவீர்.

ஆங்கிலம்:- லாங்ஸ்டன் ஹ்யூக்ஸ்/அமெரிக்கா
தமிழில் :- இந்திரன் தமிழ்நாடு

''அம்மா .. இப்ப எங்கடை டெவில் எங்கை நிற்கும் ' அன்னலட்சுமியிடம் மகன் கேட்கி றான். டெவில் - அன்னலட்சுமி வீட்டில் நின்ற 'பொமரியன்' நாய்க்குட்டியின் பெயர். அன்ன லட்சுமி குடும்பத்தினர் வீட்டிலிருந்து புறப்படும் போது நாயுடன் தான் புறப்பட்டனர். செம்மணி மயானத்திற்கருகே நாய்க்குட்டி கைதவறி விட்டது .. தூக்கியபாதத்தைப் பதிக்க இடமில் லாத சன சமுத்திரத்துள் நாய்க்குட்டியைத் தேடிப்பிடிக்க முடியுமா? புதிதாக வாங்கிய நெருப்புப்பெட்டிக்குள் நெருப்புக்குச்சிகள் எப் படிநெருக்கமாக அடுக்கப்பட்டிருக்குமோ, அப் படித்தான் மனிதர்கள் நின்றார்கள்! வலிகாமத் துத் தமிழர்கள் பாக்கியவான்கள் ஏனென்றால் இப்படியொரு இடப்பெயர்வில் கலந்துகொள்ளு கின்ற வாய்ப்பைப்பெற்றவர்கள்!

எங்கடை ஊரிலை எத்தினையோ பொழுது போக்குகளெல்லாம் இருக்கு இந்த ஊரிலை



ஒருவர்: வெளிநாட்டிற்குப் போனதில நல்ல வடிவாகத்தான் வந்திருக்கிறீர்!

மற்றவர்: ஓ ! வெளியில வடிவாகத்தான் இருக்கு ... உள்ளுக்குள் எல்லாம் அழுகிப்போச்சு.

---

ஒண்டுமே இல்லை .. சாப்பிட்டுச்சாப்பிட்டுச் சும்மா இருக்க விசராய் இருக்கு .. றெயில் பெட்டிமாதிரி இந்தக் சொட்டிலுக்குள்ளை எத்தினை நாளைக்கெண்டு இருக்கிறது. எங்கையெண்டாலும் ஒருவீடு பார்த்துக்கொண்டு கெதியாய் போயிடவேணும் '' பரமேஸ்வரி அலுத்துக் கொள்கிறாள். பரமேஸ்வரி கல்வித்திணைக்களத்தில் ஆரம்பப்பிரிவு கல்வி ஆலோசகராய் பதவி வகிப்பதாகக்கூறிக் கொள்கிறாள். மிகவும் கறுத்தவள்தான் இருந்தாலும், பெருவாழ்வு வாழ்கின்ற, தளகர்த்தத்தனமான பூரிப்பும் அவளிடமுண்டு.

யோகேஸ்வரி திரும்பவும் தலையை நிமிர்த்தி பரமோஸ்வரியைப் பார்க்கிறாள் அந்த புஷ்டியான பார்வை விரக்திபுணர்வு நிறைந்திருந்த அவளது முகத்தில் முன்பு போல் இப்போதும் ஏளன உணர்வு படர்கின்றது...!

பரமேஸ்வரியும் யோகேஸ்வரியைப் பார்க்கின்றாள். பரமேஸ்வரியும் சாதாரணமானவளல்ல பெரும் அனுபவசாலி. யோகேஸ்வரியிடம் கதை கொடுக்கத்தான் அவள் நினைக்கின்றாள். புறா இருக்க முட்டை எடுக்கும் தந்திரம் பரமேஸ்வரியிடம் உண்டு .. யாரையுமே நோகாமல் அவள் கதைப்பாள் அதற்கிடையில் யோகேஸ்வரி பார்வைத்தொடர்பை அறுத்துக் கொண்டு பேன்பார்க்க ஆரம்பிக்கின்றாள்.

பரமேஸ்வரி மௌனியாகிவிட்டாள்

இரண்டு வருடங்களுக்கு முன்பு, யோகேஸ்வரியின் புருஷன் மார்புநோயால் இறந்துவிட்டான். நண்டும் குஞ்சும்போல் நான்கு குழந்தைகளோடு யோகேஸ்வரி சுமைதாங்கியானாள்.

புத்தூர் சந்தியிலிருந்து நிலாவரை நோக்கிச் செல்கின்றவீதியில் அரைமையில் சென்றால் மிகப் பெரியதொரு மருதமரத்தையும், அதையடுத்து சில கடைகளையும் காணலாம். இந்தக்கடைகளுக்குப் பின்னால் நாலு பரப்புக்காணி, அந்தக் காணியில் சிறியதொரு வீடு; நிலத்துக்கு சீமந்து போட்டு, மண்ணால் சுவர்கள் வைக்கப்பட்டு ஓலையால் மேயப்பட்டுள்ளது. சுற்றிவர பனையோலையால் அடைக்கப்பட்டு, தார்பீப்பாவை வெட்டி நிமிர்த்தி படலையாகப்போடப்பட்டுள்ளது. அந்தப் படலையில் கந்தபவனம் என்று சோக்கினால் எழுதப்பட்டிருக்கின்றது.

கந்தபவனம் இப்படிப் பெயர்வைத்ததற்குக் கூட யோகேஸ்வரி ஒரு காரணம் கூறிக்கொள்வாள் யோகேஸ்வரியின் பூட்டன் கந்தக்குட்டி, நாள்பார்த்து வளைவைத்துக் கட்டியவீடிது. கந்தக்குட்டிவைத்த வளையில்தான் இன்னமும் அந்த வீடு அமைந்திருக்கின்றது. அதனால் தான் ' கந்தபவனம் ' என்று பெயர் வைத்ததாக யோகேஸ்வரி கூறிக் கொள்கிறாள்.

வீட்டின் இடதுபக்க மூலையில் உயர்ந்து வளர்ந்து காய்த்தோய்ந்து சோடையாகிவிட்ட

06-03-98ல் இந்தியாவின் வங்கக்கடலில் இரு கால்களும் ஊனமான பதினெட்டு வயதான சிறீதர் என்பவர் குதித்து தொடர்ந்து ஆறு கிலோ மீற்றரை நீந்தி மரீனா கடற்கரையை அடைந்தார்.

– உடல் ஊனம் மனிதனின் முயற்சியின் முன் ஒரு பொருட்டல்ல.

ஒரு தென்னைமரம்; அது கந்தக்குட்டிவைத்த மரம், அதை இன்னமும் தறிக்காமல் வைத்திருக்கின்றாள் யோகேஸ்வரி. முற்றத்தில் ஒருமாமரம். அது கந்தக்குட்டியின் மகன் வேலுப்பிள்ளையால் வைக்கப்பட்டது. மண் திண்ணையாக இருந்த இந்தவீட்டுக்குசீமெந்துபோட்டதுவேலுப்பிள்ளையின் மகன் புண்ணியமூர்த்தி - அதாவது யோகேஸ்வரியின் அப்பன் புண்ணியமூர்த்திக்கு ஆண் வாரிசு பிறக்கவில்லை, மூத்தவள் யோகேஸ்வரி, அவளுக்குக்கீழ் மூன்று பெண்கள். மூத்தவள் என்ற முறையில் யோகேஸ்வரிக்குத்தான் அந்த வீடு வழங்கப்பட்டது.

"அம்மா தமிழ்மொழித்தினப் போட்டியிலை நான் வாங்கின சேட்டிவிக்கற்றை வீட்ட சாமிப்படத்துக்குப் பின்னாலை வெச்சிட்டு விட்டிட்டு வந்திட்டன்" யோகேஸ்வரிக்கு முன்னால் அமர்ந்திருந்த அவளது மகள் யசோதா கூறுகிறாள். யசோதா நடனத்தில் மிகவும் கெட்டிக்காரி. பாடசாலையில் நடந்த தமிழ் மொழித்தினப் போட்டியில் நடனத்தில் முதலாவது பரிசு பெற்றிருந்தாள். அதைத்தான் அவள் கேட்கிறாள்.

"போகக்கூடாதெல்லாம் போட்டுது.. உந்தச் சேட்டிவிக்கற்றாலைதான் எல்லாம் வரப்போகுது! அது போனால் போகட்டும்" யோகேஸ்வரியின் இதயத்திலிருந்து வார்த்தைகள் பிரசவிக்கின்றன.

யோகேஸ்வரியின் பார்வைக் கூர்களுக்கு இலக்காகி சலனப்பட்டுப்போயிருந்த பரமேஸ்வரி யோகேஸ்வரியின் பேச்சை அவதானிக்கின்றாள்.

"போகக்கூடாதெல்லாம் போட்டுது" யோகேஸ்வரி கூறிய அந்த வாக்கியம், பரமேஸ்வரியின் மனத்தில் பெரும் கேள்விக்குறியாய்ப் பர்ணமிக்கின்றது..

வறுமை வெக்கையில் வறுக்கப்பட்டு உலர்ந்து போனவள் யோகேஸ்வரி. இவள் என்னத்தை இழந்திருப்பாள்? "போகக்கூடாதெல்லாம் போட்டுது" என்று அவள் கூறியது அது என்னவாக இருக்கும்?.. பரமேஸ்வரியின் இதயப் பொக்கணை வரை அந்தக் கேள்வி செல்கிறது.

பேன் பார்த்துக்கொண்டிருந்த யோகேஸ்வரி மீது பரமேஸ்வரியின் பார்வை நங்கூரமிடுகின்றது யோகேஸ்வரியிடம் எந்தச் சலனமுமில்லை!

> இனிமையான குணநலன்கள் கொண்ட நல்ல மனிதன் தன்னைச் சுற்றியுள்ள மற்றவர்களையும் தன்வாரிசுகளாகவே ஆக்கிவிடுகிறான்.
>
> - கிரீஸ்நாட்டு பழமொழி

"நீங்கள் ஆனைக்கோட்டைப் பக்கம் வந்திருக்கிறியளோ" இதுவரை மௌனமாக இருந்த செல்லம்மா ஆரம்பிக்கின்றாள்.

"நாங்கள் கொழும்பிலைதான் கூடினகாலம் இருந்தனாங்கள் யாழ்ப்பாணம் வந்தாப்பிறகு மானிப்பாய் மருதடிப்பிள்ளையார் கோயிலுக்கு ஒருக்கா வந்திருக்கிறன்" நிர்மலா கூறுகிறாள். நிர்மலா அண்மையில் பல்கலைக்கழகத்தால் வெளியேறிய ஒரு பட்டதாரி.

"எங்கடை வீட்டை நீங்கள் பாக்கவேணும் பாகிஸ்தான் பிளானிலை கட்டின வீடு. எங்கடை அண்ணன் பாகிஸ்தானிலை நிக்கிறார். அவர் அங்கையுள்ள ஒரு வீட்டைப் படம்புடிச்சு அனுப்பினவர்... ஏழு அறை, ஏழு அறைக்கும் ஏழு முகடு. புதுமாதிரியான வீடு ஓடுபோட்டு, அதுக்குமேலை சீமெந்து போட்டு உள்ளுக்கை சீற் அடிச்சிருக்கு சுத்திவர மாமரமும் பலாமரமும் நிக்குது மதில்க்கரைபோடை தென்னை மரங்கள் எந்தநேரமும் குளிர்ச்சியாய் இருக்கும்... வாற தைமாதம் அண்ணன் வர இருக்கிறார் அதுக்குள்ளை இப்பிடி நடந்துபோச்சு.. அந்த வீட்டிலை இருந்த நாங்கள் இப்ப இந்த கொட்டிலிலை இருக்கிறம்... அதுதான் கவலையாயிருக்கு படுக்க இடமில்லை, உடுப்பு மாத்த இடமில்லை.. எப்பதான் அந்தப் பிரச்சனை தீரப்போகுதோ .... என்ன பாடுபட்டாவது கொழும்புக்குப் போட்டமெண்டால்.. அண்ணன் காசு அனுப்புவர் ஒருவீட்டை எடுத்துக்கொண்டு நிம்மதியாய் இருந்திடலாம்" செல்லம்மா கூறுகிறாள்.

இவ்வளவு நேரமும் சகலதையும் கேட்டுக்கொண்டிருந்த யோகேஸ்வரி பெருமூச்சுவிட்டபடி, கால்களை நீட்டி வசதியாக அமர்ந்து.. சர்வசாதாரணமாக செல்லம்மாவைப் பார்க்கின்றாள் .... செல்லம்மா யோகேஸ்வரியின் பார்வையை அவதானிக்கவில்லை. ஆனால் பரமேஸ்வரி, யோகேஸ்வரியை அவதானிக்கின்

நாள் பரமேஸ்வரி யோகேஸ்வரிக்கு ஏற்பட்ட இழப்புக்களை அறிந்துகொள்ளவேண்டுமென்ற ஆவல்

''போகக்கூடாதெல்லாம் போட்டுது'' சில நிமிடங்களுக்குமுன் யோகேஸ்வரி கூறியது. திரும்பவும் பரமேஸ்வரியின் மனத்தில் ஊறுகின்றது.

யோகேஸ்வரி அப்படி என்னத்தை இழந்துவிட்டாள்?.. திரும்பவும் பரமேஸ்வரியின் மனதில் கேள்வி ஜனனிக்கின்றது.

ஏறத்தாழ பத்தடி தூரத்திலிருந்த பரமேஸ்வரி எழும்பி யோகேஸ்வரியை நோக்கி வருகின்றாள் ''நாளைக்கு எத்தினை மணிக்காம் நிவாரணம் பதியப்போகினமாம்'' யோகேஸ்வரியிடம் லேசாகப் பேச்சுக் கொடுக்கிறாள் பரமேஸ்வரி.

''போகயிக்கை என்னையும் கூப்பிடுங்கோ சேர்ந்து போவம்...'' கூறியபடி யோகேஸ்வரிக்கு பக்கத்தில் அமர்கிறாள் பரமேஸ்வரி.

---

இரத்தக்குழாய்களில் உருவாகும் கொலஸ்ரோலைக் குறைக்க என்ன மருந்து சாப்பிடலாம்? தினசரி ஐந்து மிளகுகளை தூள் செய்து அரை டம்ளர் தண்ணீரில் கலக்கி குடித்து வந்தால் இந்தக் கொழுப்பு அடைப்பு நீங்கிவிடும்.

---

''யோகேஸ்.. நான் கேக்கிறனெண்டு குறை நினைக்காதை... நீ என்ரை சகோதரம் மாதிரி. நான் வந்த நாள் துவக்கம் பாக்கிறன்.. உன்ரை மனதிலை ஏதோ பெரிய கவலையொண்டு இருக்கிறது முகத்திலை தெரியிது..'' பரமேஸ்வரி பிரச்சனைக்கு வருகின்றாள்.

''உண்மைதான்'' யோகேஸ்வரி பெருமூச்சுடன் கூறுகின்றாள்.

''கவலையளை மற்றவைக்குச் சொன்னால்த்தான் ஆறுதலாக இருக்கும்..... என்னண்டு சொல்லு..''

''என்னத்தைச் சொல்லுறது...''

''நகைநட்டை விட்டிட்டுவந்திட்டியோ...''

நேற்றைய தவறுகள் நாளையும் தொடராமலிருக்க இன்றே திட்டமிட்டுத் திருத்திக் கொள்பவன் புத்திசாலி.

பிடரடிக்

''அப்பிடிப் பெரிசாய் என்னட்டை நகை நட்டு ஒண்டுமில்லை''

''ஏதாலும் காசு பணம்''

''என்னட்டை எங்காலை காசு''

''பொருள் பண்டம்''

''என்னட்டை ஒண்டுமே இல்லை''

''அப்ப என்ன கவலை''

யோகேஸ்வரி கண் வெட்டாமல் பரமேஸ்வரியைப் பார்க்கின்றாள். அவளது இதயத்தில் வேதனை விரிவதை முகம் பிரதிபலிக்கின்றது. பேன் பார்ப்பதை நிறுத்திவிட்டு சீலையை ஒதுக்கிக் கால்களை மடக்கி, வசதியாக அமர்கின்றாள்.

''என்ரை பூட்டன் வளை வெச்சுக் கட்டின வீடு, அவர் வாழ்ந்து அதுக்குப்பிறகு என்ரை பேரன் வாழ்ந்து... என்ரை அப்பு வாழ்ந்து.. இப்ப நான் வாழ்ந்துகொண்டிருக்கிற என்ரை பரம்பரைச் சொத்தைக் காப்பாற்ற முடியாமல்.. ஓடியந்திட்டன் அதுதான் தீராத கவலையாய்க்கிடக்கு..'' யோகேஸ்வரியின் கண்கள் கலங்கிவிட்டது.

''நான் பிறந்து, தவழ்ந்து நடந்த அந்த மண் இப்பவும் என்னோடை ஒட்டிக்கொண்டிருக்கு..'' இப்படிக் கூறியவள் காலை மடக்கி குதிக்கால் பகுதியைக் காட்டுகிறாள்.

வெள்ளரிப்பழம் வெடித்துப் பிளந்தது போல், பிளந்திருக்கும் பித்தவெடிப்புக்குள் புத்தூர் சிவந்த மண் வரம்புபோல் படிந்து கிடக்கின்றது.

''மண்ணை நான் விட்டிட்டன் மண் என்னை விடயில்லை. யோகேஸ்வரியின் வாய் முணுமுணுக்கின்றது.

---

நீ பேசும்போது எதையும் கற்பதில்லை
You just Never Learn Anything when you're Talking.
JEFFREY G. ALLEN

# சிந்தனைகளும்



ஒருவர்: என்ன மச்சான் திடீரென்று பல் எல்லாத்தையும் காணேல்ல...!

மற்றவர்: அது... பெண்பார்க்க போன வீட்டில பொம்பிள தந்த லட்டைத் திண்டன்...

நந்தினி - கல்வியங்காடு

# சிரிப்புகளும்

நான் வறுமையை அடைந்ததில்லை
பணம் இல்லாமல் இருந்திருக்கிறேன்
வறுமை அடைதல் ஒரு மனநிலை;
பணமின்மை ஒரு தற்காலிக நிலை'

I've never been poor; only broke.
Being poor is a fame of mind.
Being broke is only a temporary-situation.

- MIKE TODD

ஒருவர்: டொக்டர்... நீங்கள் தலைவலியை மாத்திவிடுகிறேன் எண்டு சொன்னது இப்பதான் எனக்கு விளங்குது

டொக்டர்: .......... ?




ஒருவர்: தலைவலி மாறி இப்ப வயித்துவலி வந்திருக்கு

கௌதமன் - நல்லூர்

ஒரு மனிதன் பல தடவை வீழலாம். ஆனால் அவன் தோற்றான் என்று சொல்ல முடியாது. ஆனால் ''என்னை யாரோ தள்ளிவிடுகிறார்கள்'' என்று எப்போது அவன் சொல்லத்தொடங்குகிறானோ அந்தக் கணத்திலே அவன் தோற்றான்.

ஃபார்மர்ஸ் அட்வகேட், கனடா



கணவன்: உது கதகளியா... குச்சுப்புடியா

மனைவி: இது வெய்யில் துடி.. இந்த கொடுவெயில்ல நடக்க முடியுதில்லை

– மோகன் - யாழ்.

நீங்கள் அதிஷ்டத்தை நம்புகிறீர்களா? என்று ஜீன்காக்டு என்ற பிரபல ஆசிரியரை யாரோ கேட்டார்கள்.

''ஆஹா! தாராளமாக நம்புகிறேன். உங்களுக்குக் கொஞ்சமும் பிடிக்காதவர்களின் வெற்றிக்கு அதிஷ்டத்தை தவிர வேறு என்ன காரணத்தை நீங்கள் சொல்ல முடியும்''

- தி இங்கிலிஸ் டைஜெஸ்ட்



கட்டுரை

# வாழ நினைத்தால்

இறைவனின் அகண்ட பரிபூர்ண சக்தி, சாந்தமான தென்றற் காற்றாகத்தான் வருகிறது; புயலாக அல்ல!

உனது அன்பிலே, அருளிலே எனக்கு பூரண நம்பிக்கை உண்டு என்பதை எனது இறுதி வார்த்தையாகச் சொல்லி முடிக்கிறேன்; இறைவா!

- ரவீந்திரநாத் தாகூர்

ஒருமுறை வலிகாமத்தின் ஒரு கிரா்மம் ஒன்றிற்கு போயிருந்தேன். திரும்பும்போது அவ்வூர் இளைஞர் சிலர் என்னுடன் வந்தனர். வயல்ப்புறத்து கோயிலொன்றைக் காட்டி அது அம்மன் கோயில் என்றும், மிக அற்புதமான தெய்வம் என்றும் கடந்தவருடம் நடந்த அற்புதம் ஒன்றை பயபக்தியுடன் கூறினர். ''மத்தியான வேளையில் வழமையாக இழுக்கப் படும் தேர் அம்முறை மட்டும் காலையில் இழுக்கப்பட்டதால் கோபமுற்ற அம்மன் அத்தேர் செய்த ஆசாரிகளில் ''ஒருவரை தேர் சில்லினாலேயே பலிகொண்டுவிட்டது.'' இதுதான் அம்மன் செய்த அற்புதம்

இறை நம்பிக்கையை இப்படி மூடத்தனமான நம்பிக்கையாக இந்த இளைஞர்களின் மனதில் விதைத்துவிட்ட பாவியை நினைத்து நொந்தேன். உடனே நான் ''அப்படியாயின் அது தெய்வமாக இருக்கவே முடியாது பசாசாகத்தான் இருக்க வேண்டும்'' என்று கூறினேன். அவர்கள் என்னை பயத்தோடும், ஆச்சரியத்தோடும் பார்த்தார்கள். அன்பே வடிவான இறைத் தன்மையினை கொடூரத்தனமான பசாசின் தன்மையாக இவ்விளைஞர்களுக்கு காண்பித்த மூடன் யார்?

''தாயிற் சிறந்த தயவா்ன தத்துவனாக'' ''பெருங்கருணைப் பேராறாக'' இறைவனைக் காணும் சைவமதம் - இப்படி கொடூரத்தன்மை கொண்டதாக இறைவனை சிருஷ்டித்திருக்க இயலாது.

தனது இதயத்தை வெட்டி தாசியிடம் கொண் டோடும்போது தவறி வீழ்ந்த தன் மகனைப் பார்த்து நிலத்தில் வீழ்ந்துகிடந்த அவ்வெறிய னின் தாயின் இதயம் ''மகனே பார்த்துப் போகக்கூடாதா?'' என்று கேட்டதாம் - அது தாயின் மன்னிக்கும் உயர்ந்த குணம் -

துண்டுதுண்டாக வெட்டப்பட்ட போதும். ஒவ்வொரு தசைகளும் தன் மகனின் மகிழ்விற் காக ஏங்குவது தாய்மனம். அதைவிட அந்த தாயைவிட இறைவனை உயர்வாகக் காட்டும் மதத்தில்

மத்தியானம், இழுக்கப்படவேண்டிய தேர் காலையில் இழுத்ததால் தெய்வம் தேர் செய்த வனையே கொன்றுவிட்டதாக ஒரு கொலை வெறியனாக கடவுளை காட்டுவது எவ்வளவு மடத்தனமான கற்பனை.

ஒரு ஏரியினூடாக படகொன்றில் சில கனவான் களும் ஒரு பிச்சைக்காரனும் பயணம் செய்து கொண்டிருந்தனர். பிச்சைக்காரனின் ஏழ்மை யினை கனவான்கள் ஏளனமாக பரிகாசம் செய்துகொண்டிருந்தனர். பிச்சைக்காரனோ தன் கண்களை மூடியபடி இறைவனை தியானித் துக் கொண்டிருந்தான்.

உடனே ஒரு அசரீரி ''பக்தனே உன்னோடு இருக்கும் அத்தனை கனவான்களையும் இவ்வேரி யில் படகோடு புரட்டி கொ்ன்றுவிடவா'' என்று கேட்டது.

அதனைக் கேட்ட பிச்சைக்காரன் திகைப்போடு ''இறைவா எப்போது நீ பசாசாக மாறினாய்'' என்றான். சற்றுநேரத்திற்குப் பின் மீண்டும் ஒரு அசரீதி கேட்டது.

''ஆம் சரியாக புரிந்துகொண்டாய் இதற்குமுன் உன்னுடன் பேசியது பசாசுதான் - இதோ இப்போது உன்னுடன் பேசும் நானே இறைவன்'' என்றது.

மன்னிக்கும் குணம்கொண்ட பெருங்கருணைச் சொரூபமே இறைவன் - இங்கே-தற்காலிகமாக- ஒரு கொடூர காட்டுமிராண்டித்தனமான மானிடத்தன்மை கொண்டதாக இறைவனைக் காட்டியிருப்பது எவ்வளவு முரண்பாடு. சைவம் மட்டுமல்ல எந்த சமயங்களும் இப்படி இறைத் தன்மையினை கேவலப்படுத்தியதாக தெரிய வில்லை. இறைநம்பிக்கை நமது வாழ்விற்கு வலுவூட்டவே! பண்பாடான வாழ்வினை வாழ்ந்து நிறைவதற்கே! பயந்து பயந்து கெட்டுக் குட்டிச்சுவராவதற்காக அல்ல. இத்தகைய முட்டாள் தனமான நம்பிக்கை கொண்ட இறைபக்தி மானிடத்தைவிட்டு அறவே இல்லா மலே போவது நல்லது. இப்படியேதான் இறைவனை ஒரு சண்டித்தனக்காரனாகவே நம்மில் பலர் கருதுகின்றனர்.

## ( அருச்சுனா )

காடையர்களுக்கு பணம் மது போன்றன கொடுத்து தமக்கு வேண்டாதவரை தாக்குவிப் பதும், கொலை செய்வதும் போன்று, கோயில் வாசலில் போய் நின்று ''இறைவா இவனுக்கு (அல்லது இவளுக்கு) இன்னும் மூன்று நாட்களில் ஏதாவது தீங்கு காட்டினால் நான் உனக்கு தேங்காய் உடைப்பேன், கற்பூரம் கொழுத்து வேன், விரதமிருப்பேன் - என்றெல்லாம் காலக் கெடு விதித்தும் - பஞ்சத்தில் கிடக்கும் பரதேசி யாக இறைவனை நினைக்கும் இந்தப் பத்தாம் பசிலித்தனத்தை என்னவென்று கூறுவது.

இறைவன் பஞ்சமே இல்லாத பிரபஞ்சத்தின் தலைவன் - அவனுக்கு நாம் லஞ்சம் கொடுக் கிறோம். எங்களது பழக்க தோசம் - இறைவனை நோக்கி நாம் எது கேட்கிறோமோ அது நமக்கே கிடைக்கும். ஏனெனில் இறைவன் எம்மோடு இருக்கிறான்; நாமாக இருக்கிறான் - ''நீயே கடவுள்'' என்றுதான் வேதங்கள் சொல்கின்றன.

எல்லா ஆத்மாக்களிடமும் பரந்து இருப்பவன் ''பரமாத்மா''

''கேளுங்கள் தரப்படும்'' என்பது யேசுநாதர் வாக்கியம் - நல்லது கேட்டால் நல்லது கிடைக் கும், தீயனவாயின் அதுவே கிடைக்கும் கேட்பது நீங்கள் கிடைப்பது மற்றவர்களுக்கா?

இறைவன் சந்நிதானத்தில் நின்று உரக்கவா கத்துகிறீர்கள்? மிக மௌனமாக உங்களுக்குள்ளே ஆண்டவனை வேண்டுகிறீர்கள். நீங்கள் உங்களுக் குள்ளே சொல்கிறீர்கள், உங்களுக்கே சொல் கிறீர்கள். அவற்றையெல்லாம் உங்களுக்குள்ளே இருப்பவன் கேட்பான். மனம் உருகி இறைவனை தொழும் போது - அவன் விக்கிரகத்தின் முன்னால் நின்றாலும்கூட கண்களை மூடி வேண்டுகிறீர்களே ஏன்? முன்னிருக்கும் உருவத்தைக்கூடமறந்து கண்களைமூடிவிடுகிறீர் கள். இதயம் அன்பினால் உருகும்போது கண்கள் மூடிக்கொள்கின்றன. அன்பு மேலிடும் போது உங்களுக்குள்ளேதான் இறைவன் இருக்கிறான் - அவன் உள்ளே இருந்து உங்கள் அன்பினை ஏற்றுக்கொள்கிறான்.

கோபவெறி கொள்ளும்போது கண்களை அகல விரித்துக்கொள்கிறீர்கள் ஏன்? உள்ளே இருக்கும் இறைவன் வெளியே போய்விடுகிறான் – நீங்கள் நினைக்கும் பசாசுத் தன்மை உள்ளே வந்துவிடுகிறது –

அடி, தடி, குத்து, வெட்டு, கொலை. இயற்கை யாகவே நமது உள்ளுணர்வு இறைவனை எம்முள்ளே வைத்திருக்கிறது- நாம்தான் உணர மறுக்கிறோம் – கேடு நினைக்கும் நினைப்பு நமது எண்ணம். அதன் குடியிருப்பாளர் நாம் – அதன் விளைச்சல் நமக்குத்தான் சொந்தம் - பிறர் வாழவேண்டும் என்று மனதார நினைத் தால் நாமும் வாழ்வோம்! வாழ்த்தப்பட்டவரும் வாழலாம் - மற்றவர் அழியவேண்டும் என்று நம் மனம் விரும்பினால் நமக்கே அந்தக்கேடு சேரும்- இதுதான் இயற்கை, இதுதான் இறைவன்.

உள்ளிருக்கும் எண்ணம் சிறந்ததாக ஆரோக்கிய மாக இருந்தால் நாம் வாழ்வோம் – பிறரை வாழ்விக்கலாம், இந்த உலகை வாழ வைக்க லாம் – சகல வல்லமையும் கொண்ட அன்பே வடிவமான இறைவனை அச்சமின்றி சுதந்திர மாக காணமுயலுங்கள், அன்போடு அவனை நெருங்குங்கள் - கேளுங்கள் நல்லவற்றை கொடுப்பான்!

● சிரிகதை

# கிராமத்துள் புகுந்த மாயமனிதன்



அதிகாலையிலே, அந்தச் செய்தி கிராமத்தில் புற்றீசல் போல வேகமாக பரவிவிட்டது. அந்த செய்தியை யார் தொடக்கினார்கள் என்பதும், அச்செய்தியிலுள்ள உண்மை பொய் எவ்வளவு என்பதும் எவருக்கும் தெரியவில்லை.

பெண்கள் மிகுந்த பயத்தோடு அச்செய்தியை அக்கம் பக்கம் பார்த்துப் பேசிக்கொண்டனர். ஆண்கள் பலர் வியப்போடும் சிறிது கலக்கத்தோடும் பேச, சிலர் வீறாப்புடன் ''வரட்டும் பார்ப்போம்'' என்றனர். குமருகளை வீட்டில் வைத்திருக்கும் பெற்றோருக்கு அந்தச் செய்தி அடிவயிற்றில் புளியைக் கரைத்தது.

'உது விசர்க்கதை...' என்றார் தாடிக்கார தர்மலிங்கம்.

என்ன பேயன்மாதிரிக் கதைக்கிறாய்? பக்கத்து ஊரில ராத்திரி நடந்த விசயம், அதுக்கு முதல் நாள் அதுக்குப் பக்கத்து ஊரில நடந்தது! சிவசத்தியமா அந்த ரெண்டு குமர்ப்பிள்ளையளையும் ஆசுப்பத்திரியிலே சேர்த்திருக்குதாம். ஒண்டுக்கு இன்னமும் நினைவு வரவில்லையாம் என்று அடித்துப் பேசினார் பீடிக்கடை வைரமுத்தர்.

''இந்தக் காலத்தில உப்பிடி நடக்குமோ?என்னெண்டு அவன் பூட்டியிருக்கிற வீட்டுக்கை ஒருவருக்கும் தெரியாமல் வாறான். வந்து சரியாகப் பெண்டுகளுக்குப் பக்கத்தில போய் தூக்கிப் போறான்''...

''அதுதான் சங்கதி... அவன் ஒரு மந்திரவாதி... மாயமனிதன்... நினைச்ச இடத்துக்கு நினைச்சவுடனை போவான். விசயத்தைக் கேள், தர்மலிங்கம் ராத்திரி கண்டியோ, அந்தக் கிராமத்தில் ஒரு வீட்டுக்கை அவன் புகுந்திட்டான் கண் விழித்த பெட்டை, முன்னால் ஒருத்தன் நிக்கிறதைக்கண்டு கத்தியிருக்குது. ஆக்கள் துரத்தியிருக்கினம்! ஒரு பொடியன் பாய்ஞ்சு பிடிச்சிருக்கிறான். அவன் அப்படியே வழுக்கிக் கொண்டுஓடிவிட்டான்! அவனை கட்டிப்பிடிக்கவே முடியவில்லையாம். வழுக்கு மரம் மாதிரி. பிடிக்கவே முடியவில்லையாம்...

- செங்கை ஆழியான்

'பேந்து?'

''ஆக்கள் பனை வடலி, வயல் வெளி எல்லாம் துரத்தியிருக்கினம். அவன் இருந்தாப்போல குரங்காக மாறி மரத்தில தாவி, இருட்டுக்கை மறைஞ்சிட்டான்..

''குரங்காக மாறியோ''?

''ஓமெண்டுறன்...''

அடுத்த நாள் பத்திரிகை ஒன்றில், பெட்டிகட்டி, கொட்டை எழுத்தில் இச்செய்தி பெரிதாகப் பிரசுரமாகியிருந்தது.'பெண்கள் பயப்பிராந்தி' 'மாயமனிதனின் திருவிளையாடல்' 'குரங்காக மாறிய மனிதன்' என்றதலைப்புகளில் அப்பத்திரிகை மூன்று நாட்கள் அச்செய்தியைப் பற்றி பந்தி பந்தியாக வெளியிட்டது.

அக்கிராமத்தை இச்செய்தி மிகவும் கலக்கிவிட்டது. இளைஞர்களைக் கொண்ட காவல் படை ஒன்றும் அமைக்கப்பட்டது. மூன்றாம் நாள் மாய மனிதன் அக்கிராமத்திற்குள் புகுந்து விட்டதாகச் செய்தி பரவியது.

விடியல் வேளையில் வடலிக்குள் சென்ற பீடிக்கடை வைரமுத்துதான் அவனைக்கண்டார். குந்தும்போது தூரத்தில் ஒரு

---

**கணவன்:-** வதை வதை என்கிறார்களே என்ன?

**மனைவி:-** இந்தாங்கோ கத்தி என்ர கழுத்தை வெட்டுங்கோ இதுதான் பெரிய வதை

**கணவன்:-** இப்படித் தெரிந்திருந்தால் கலியாணம் முடிச்ச அடுத்தநாளே செய்திருப்பேன்.

அ. உ. குமாரி – நல்லூர்

---

மனிதன் வருவதைக் கண்டார். எழுந்தபோது, பெரியதொரு கடுவன் குரங்கு அவர் முன்னுள்ள மரத்தில் தாவி ஏறி ஓடியதைக் கண்டார்.

மாயமனிதன் குரங்காக ஊருக்குள் புகுந்துவிட்ட பரபரப்பான செய்தியை வைரமுத்தர் ஊரெங்கும் அறிவித்தார்.

''வந்து பார்ப்பார். எல்லாம் பெடியள் என்று திரும்பி விடுவார்..'' என்று கூறிக்கொண்டார்.

சங்கக்கடை சிங்காரவேலருக்கு ஒரு பையனும் ஒரு வயது வந்த பெண்ணும் இருந்தனர். அவரும் மனைவியும் பகல் பகலாக யோசித்துப் பார்த்தனர். ஒரு வழி தென்பட்டது.

> எங்கே எதைத் தேடிப் புறப்பட்டாலும் உறுதியான மனத்துடன் செல்லுங்கள். உறுதியான மனதிற்கு தேவைப்பட்டதைக் கண்டிப்பாகப் பெற்றுத்தரும் ஆற்றலுண்டு. இதை மறந்து விடாதீர்கள். உறுதியான மனமே உன்னதமான வாழ்வை ஏற்படுத்தும்.
>
> – நோர்மன் வின்சன் டீல்

பயப்பிராந்தி ஊரைப் பயங்கரமாகக் கவ்வியது. அன்றுமுழுவதும் ஊரெங்கும் இதேகதைதான். மாலை கவியக்கவிய ஒவ்வொரு வீடுகளிலும் ஏக்கமும் பயமும் குடிகொண்டன.

தாடிக்காரத் தர்மலிங்கத்தாருக்கு நான்கு மருமக்கள்; மிகவும் பயந்து போனார். அலவாங்கு ஒன்றை எடுத்து பக்கத்தில் வைத்துக் கொண்டார்.

''பிள்ளையள் ஒருத்தரும் ராவைக்கு படுக்கேக்க பாவாடை சட்டை போடாதையுங்கோ. அண்ணன்மாற்றை சாரங்களைக் கட்டி, சேர்ட்டுக்களைப் போட்டுக்கொண்டு படுங்கோ..' என்று கட்டளையிட்டார். அதன் பிறகு அவருக்கு ஒரு திருப்தி.

நிச்சயமாக இந்த வீட்டில் பெண் பிள்ளைகள் இல்லை யென்று மாயமனிதன் ஏமாந்து போவான்.

மகனை, மகள் படுக்கிற அறையில் படுக்கச் சொன்னார். மகளை மகன் படுக்கிற ஹோலில் படுக்கச் சொன்னார்.

''சோக்கான யோசினை. உவர் ஏமாந்து போவார், வடுவா ''

நடுராத்திரியில் சிங்காரவேலரின் மகன் வீரிட்டுக் கத்தினான்.

''என்ன என்ன?..'' கொடுவாக்கத்தியை எடுத்துக்கொண்டு சிங்காரவேலர் பாய்ந்தார்.

''ஆரோ... எனக்கு முன்னால நின்றதுபோல இருந்தது. பயந்து கத்திவிட்டன்'' என்றான். பையன் ''தூ தூ '' என்று சொல்லி நெஞ்சில் தட்டிவிட்டு சிங்காரவேலர் காவல் இருந்தார்.

இன்னும் சில வீடுகளில் பெண்கள் றவுசர்களை மாட்டிக் கொண்டு படுத்தனர். பையன்கள் கவுன்களைப் போட்டுக் கொண்டு உறங்கினர்.

கனகசபை மாஸ்டருக்கு நித்திரையே வரவில்லை. நாற்சாரம் வீடு. ஒரு விறாந்தையில் அவருடைய எட்டுப் பிள்ளைகளும் வரிசையாகத் தூங்கிக்கொண்டிருந்தனர். அவர்களுக்கு அருகில் அவரது மனைவி சரஸ்வதியும் இழுத்து மூடிக்கொண்டு படுத்திருந்தாள். வாங்கில் படுத்திருந்த ஆசிரியருக்கு நித்திரை வரமறுத்தது.

மாயமனிதன் பயம் ஒருபக்கம். மனைவி, பிள்ளைகளுடன் போய்ப் படுத்தது இன்னொரு பக்கம். மனைவியும் மாயமனிதனின் பயத்தில் நித்திரை வராமல் கிடந்தாள்.

இருந்தாற்போல யாரோ அவளுடைய காலைச் சுரண்டியது போல ...

''ஐயோ ஆராவது வாருங்களேன், என்ரை ஐயோ ''

''ஏன்ரி கத்தினாய் அறுவாளே? அது நானடி '' என்று கனகசபை மாஸ்டர் தவிக்க

சத்தத்தில் விழித்துக்கொண்ட பிள்ளைகள் எட்டும், என்ன நடந்தது ஏது நடந்தது என்பது அறியாமல் அலற

ஒழுங்கையால் இரவுக் காவலுக்குப் போன பத்துப் பன்னிரண்டு பொடியன்கள் படபடவென்று உள்ளே பாய்ந்து, திகைத்துப்போய் நின்ற மாஸ்டரை இருட்டில் யார் என்று தெரியாமல் வாங்கு வாங்கென்று வாங்கிவிட்டார்கள்.

**ஹைகூ**

வாழ்க்கை;
அசைந்தாடும் புல்லின்மேல்
வண்ணத்துப் பூச்சி
அவ்வளவுதான்;
ஆனால் எத்தனை அழகு?

- ஸோயிகி

மில்காரச் சுப்பிரமணியத்தார் வீட்டில் இன்னொரு சம்பவமும் நடந்தது. அயல்களில் உள்ள பெண்கள் எல்லாரும் அவர் வீட்டு ஹோலில் படுத்திருந்தார்கள். ஆண்கள் எல்லோரும் தடி, பொல்லு, அலவாங்கு, கத்தி, கோடரி முதலான ஆயுதங்களுடன் வீட்டைச் சுற்றிக் காவல் இருந்தார்கள்.

அரைச்சந்திர வெளிச்சம். நேரம் நல்லிரவைக் கடந்துவிட்டது. காவலுக்கு இருந்தவர்கள் அப்படி அப்படியே தம்மை மறந்து உறக்கத்தில் ஆழ்ந்து கொண்டிருந்த வேளையில்

வேலிவரிச்சு மட்டைகள் படபடவென முறியும் சத்தம் எழுந்தது. சுப்பிரமணியத்தார் விழித்துப் பார்த்தார். அவரைப்போல பலரும் பார்த்தார்கள்.

வெள்ளைவெளேரென்று ஒரு உருவம். நல்ல உயரம் வீற்றிருந்தது.

பயத்தோடு எல்லோரும் பாய்ந்தார்கள். அப்படி ஒரு பாய்ச்சல். அந்தஉருவம் பாய்ந்து ஓடத்தொடங்கியது. அவர்களும் விடவில்லை. துரத்தினார்கள். அந்த உருவம் வயலுக்குள் இறங்கியதும்தான் தெரிந்தது.

அது தணிகாசலத்தின் நாம்பன் மாடு என்று.

ஊரெல்லாம் இப்படி அமளிப்பட, பீடிக்கடை வைரமுத்தர் மட்டும் நிம்மதியாக மூன்று நான்கு இரவுகள் நித்திரை கொண்டார். ஊர் எல்லாம் கொள்ளை, களவுகள், தான் தேடி வைத்திருப்பவற்றை யாராவது கள்ளர் அடித்துக் கொண்டு போய்விடுவார்கள் என்ற பயத்தில் பல நாட்களாக யோசித்து இப்படிஒரு புரளியைக் கிளப்பிவிட்டிருந்தார்.

இரவெல்லாம் ஊர் விழித்திருக்க, அவர் நிம்மதியாக நித்திரை செய்தார். நான்காம் நாள் இருந்தாற்போல உறக்கம்கலைந்தது. மெதுவாக எழுந்து யன்னலால் பார்த்தார்.

வேலியைத்தாண்டி ஒரு உருவம் குதித்தது.

'மாயமனிதனோ?......'

அப்படியிருக்காது; மாயமனிதனேயில்லை. நான் கட்டிவிட்ட புரளி அது'

'கள்ளனோ?'

அவரால் எதுவும் பேசமுடியவில்லை. நாக்கு பயத்தால் மேலண்ணத்தோடு ஒட்டிக் கொண்டது. பயத்துடன் பார்த்தார். அந்த உருவம் மனிதனாக இருப்பதும்.. சிறிது நடந்ததும் குரங்காக மாறுவதும்.. பிறகு மனிதனாகி குரங்காகி .....

(மறுபிரசுரம் நன்றி சிரித்திரன் பெப்ரவரி' 84)

□

செல்வந்தர்கள் தமக்காக இறப்பதற்கு மற்றவர்களை வேலைக்கு வைத்துக்கொள்ள முடியுமாயின் ஏழைகள் நல்வாழ்க்கை அடைவார்கள்

If The rich could hire Other people to die for them, The poor Could make wonderful living.

- UNKNOWN

கவிதை எழுதுவதில் உள்ள கௌரவம் நிலத்தை உழுவதிலும் இருக்கிறது.

There is as much dignity in tilling a field as in writing a poem.

- BOOKER T. WASHINGTON

**சிறுகதை, கவிதை, நகைச்சுவைத் துணுக்குகள் போன்றன வரவேற்கப்படுகின்றன.** சுந்தரனில் பிரசுரமாகும் ஒவ்வொரு சிறுகதைக்கு ரூபா 200/- ம், கவிதைக்கு ரூபா 50/- ம், நகைச்சுவை துணுக்கு ஒவ்வொன்றிற்கும் ரூபா 20/- ம் வழங்கப்படும்.

ஆக்கங்கள் இதுவரை பிரசுரமாகாததாக இருத்தல் வேண்டும்.

# போமலின் (Formalin)

**பழங்களில் சேர்க்கப்படும் நஞ்சு?**

போமலின் எனப்படும் இரசாயனப் பொருள் மாங்காய் உட்பட பழங்களை பழுக்கச் செய்வதற்குப் பயன்படுத்தப்படுவதாக அறியப்படுகிறது. இது ஒரு தவறான பிரயோகமாகும் இதனால் ஏற்படக்கூடிய விளைவுகளை ஆராய வேண்டியதும், தெரிந்து கொள்ள வேண்டியதும், தடுப்பதும் எமது கடமையாகும்.

போமலின் திரவம் (Solution) 34-38%இல் போமல்டிகைட்டையும் ($CH_2O$) அதனுடன் மெதனோல் ($CH_3OH$) ஐயும் கொண்டதாகும். மூக்கை அரிக்கும் மணத்தையும், எரிவையுடைய சுவையையும் கொண்டது. (Irritaling Odear and Burning Taste) பல நாட்களுக்கு குளிரான சூழலில் இத்திரவத்தை வைத்திருந்தால் வெள்ளைநிற வீழ்படிவு உண்டாகும்.

### போமலினின் தீய விளைவுகள்

போமலின் ஆவி மூக்கை அரிக்கும் தன்மையுடையது. அத்துடன் இந்த ஆவி கண், சுவாசத் தொகுதி போன்றவற்றையும் அரித்து அழற்சியையுண்டாக்கும் இதனால் இருமல், சாப்பாடு விழுங்க முடியாத நிலை ( Dysprazia ), குரல் வளைஅதிர்வு (Sparm of Largn), மூச்சுக்குழாய் அழற்சி ( Bronchiris ), நியூமோனிய (Pneumonia), ஆஸ்துமா (Asthma) போன்றவை தொடர்ச்சியாக போமலின் ஆவியை அல்லது போமலின் கொண்ட பதார்த்தங்களை திரும்பத் திரும்ப உண்பதனால் ஏற்படும்.

போமலின் திரவத்தை உண்பதனால் உணவுக்கால்வாயில் அழற்சியும், அல்சரும் (Ulcor) உணவுக்கால்வாய் மேலணியின் அழிவும் ஏற்படும். இதனால் சத்தி (Vomitis), இரத்தத்துடன் சத்தி, இரத்த வயிற்றோட்டம், சலத்தில் இரத்தம் கலந்து போதல், சலமே போகாமல் விடல், ( Anur a ) தலைச்சுற்று, (Gidiness) வலிப்பு, (Convulsions) இரத்தச் சுற்றோட்டம் ஸ்தம்பிதமடைதல் (Ciranlatory Prilure) போன்றவை ஏற்படும்.

30ml. போமலின் திரவத்தை குடிப்பதனால் ஒருவர் இறக்கவும் கூடும்.

உண்மையிலேயே போமலின் திரவம் ஒரு தொற்றுநீக்கியாகும். (Disintectant) பக்ரீரியா, பங்கஸ் ( Fangas ), வைரசு (Viras) போன்றவற்றை அகற்றப் பாவிக்கப்படுகிறது.

இந்த போமலின் திரவத்தை மாங்காய் போன்றவற்றை விரைவில் பழுக்க வைப்பது வியாபார நோக்கத்திலாகும். இதனால் பல மாம்பழங்களை உண்ணும் ஒருவரின் உடலில் அதிகளவில் போமலின் போய்ச் சேரலாம் அதனால் மேற்கூறிய விளைவுகள் ஏற்படலாம். சில நேரங்களில் சிறியவு போமலின்கூட பெரிய விளைவுகளை ஏற்படுத்தலாம்.

பெருமளவில் பணத்தைப் பெறும்கெட்ட நோக்கத்தினால் மக்களுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய இப்படியான செயல்களை வியாபாரிகள் செய்வது உடனடியாக நிறுத்தப்படவேண்டும். போமலின் ஒரு சமுதாயக் கொல்லியாக, மக்கள் கொல்லியாகப் பாவிக்கக் கூடாது. இது ஒரு சமுதாய அழிவின் அறிகுறியேயாகும்.

**Lion Dr. M. Paramsothy**

ஓர் 'ஈ' போதும் உங்கள் வீட்டிலுள்ள நபர்களை நோயாளிகளாக்க. 50 ஆயிரம் கண்ணுக்கு தெரியாத நோய்க் கிருமிகளை ஓர் 'ஈ' தன் முதுகிலும், கால்களிலும் சுமந்து கொண்டு வருகிறது என்று ஒரு விஞ்ஞானி சொல்கிறார். ஈயை விரட்டுகிறவர்கள் நோயை விரட்டுகிறார்கள்.

# சிங்கமும் நரியும்

காட்டிலிருக்கும் விலங்குகள் எல்லாம் ஒன்றுகூடி சிங்கத்திடம் சென்றன. ''சிங்கமே நீர்தான் எங்கள் அரசர். நரி மிகவும் குள்ளத் தனமாக செயற்படுகிறது. தயவுசெய்து அதனை நல்வழிப்படுத்துங்கள்'' என்று ஒத்த குரலில் கோரிக்கைவிடுத்தன. ''அது என்ன குறும்பு செய்கிறது?'' சிங்கம் கேள்வி எழுப்பியது. ''அது எப்போதும் எங்களைப் பார்த்து சிரிக்கிறது. எங்களுடன் கூட வேலைகள் செய்வதில்லை'' மற்ற மிருகங்கள் குறிப்பிட்டன. ''அது பகல் முழுவதும் காட்டில் குந்தியிருந்துவிட்டு பிற்பக லில் எமது உணவை அபகரித்துச் சாப்பிட்டு விடுகிறது'' ஒநாய் ஒன்று தெரிவித்தது.

''அதனை என்னிடம் வரச்சொல்லுங்கள். நான் அதனுடன் பேசிக்கொள்கிறேன்'' சிங்கம் பதலளித்தது.

ஒன்றன்பின் ஒன்றாக ஒவ்வொரு மிருகமும் நரியிடம் சென்றன. ''சிங்கம் உன்னிடம் பேச விரும்புகிறது. சென்று சந்திக்கவும்'' என்ற செய்தியைத் தெரிவித்தன.

பெருத்த குரலில் நரி சொன்னது ''நான் போகப்போவது இல்லை''

நரியின் திமிர்த்தனமான இந்தப் பதிலால் ஏமாற்றமடைந்த மிருகங்கள் சிங்கத்திடம் சென்றன.

''நரி உங்களைச் சந்திக்க வரமாட்டேன் என்று கூறுகிறது'' என்பதைத் தெரிவித்தன.

''உங்கள் ஒருவராலும் நரியைக் கூட்டிவர முடியவில்லையா?'' சிங்கத்தின் குரலில் கோபம் கொப்புளித்தது.

சிங்கத்தின் பார்வை பூனையின் பக்கம் திரும்பியது. ''நீ போய் அதைக் கூட்டிவா'' எனக் கட்டளையிட்டது.

''நான் போக விரும்பவில்லை'' பூனை முணுமுணுத்தது. ''ஏற்கனவே நரியின் மீது எனக்கு விருப்பமில்லை நான் ஒரு சின்னப் பூனை என்னால் எப்படி அதைக் கூட்டிவர முடியும்'' பூனை தொடர்ந்தது.

ஆனால் சிங்கம் இரங்கவில்லை. ''நான் தான் அரசன் என்பதை மறந்துவிடாதே. எனது கட்டளையை உடனே நிறைவேற்று'' என்று கூறிவிட்டு சிங்கம் மறுபக்கம் திரும்பிவிட்டது.

பூனை நரியிடம் சென்றது. பூனையின் வரவை நரி கவனித்தது. வாசல்வரை வந்து வரவேற்றது.

இனிய நண்பனே! காலை வணக்கம் வா'' நரியின் வரவேற்புக் கண்டு பூனைக்கு உச்சி குளிர்ந்தது.

''உனக்காக என்ன செய்யவேண்டும்? உள்ளேவா உனக்காக நான் பால் வைத்திருக் கிறேன். குடிக்கலாம்'' நரி மேலும் தொடர்ந் தது.

**(ஜேர்மனிய நாடோடிக் கதை)**

பூனைக்கு ஏற்கனவே பசியும், தாகமும் மிகுதியாக இருந்தன. ''நன்றி நன்றி'' என்று சொல்லிக்கொண்டு பூனை நரியின் வீட்டுக்கு உட் பக்கம் சென்றது.

நரி கொண்டுவந்து வைத்த பாலை மிகவும் விரும்பிக் குடித்தது.

''உனக்குப் பசி எடுக்கிறது போலும்'' நரி கேட்டது.

''ஓமோம்'' என்றது பூனை. ''நான் மிகவும் நீண்ட தூரம் நடந்துவிட்டேன். அத்துடன் எதையும் சாப்பிடவில்லை'' என்று தொடர்ந் தது.

''என்ன சாப்பிட விரும்புகிறாய்'' நரியின் கேள்வி.

''உன்னிடம் அருமையான சுண்டெலி இருக் குமா'' பூனையின் பதில்.

''இங்கு என்னிடம் சுண்டெலி இல்லை. ஆனால் பக்கத்துவீட்டில் உள்ளது. என்னுடன் வா போய்ப் பார்ப்போம்'' நரி அழைத்தது.

பக்கத்து வீட்டில் ஒரு மனிதன் வசித்து வந்தான். அவனிடம் பல கோழிகள் இருந்தன. நரி இரவு நேரங்களில் அவற்றில் சிலவற்றைச் சாப்பிட்டும் உள்ளது. அதனால் அவன் நரிக்காக பொறியொன்றை வைத்திருந்தான். நரிக்கும் அது ஏற்கனவே தெரியும். அதனால் அது தந்திரமாக தப்பிக்கொண்டு வந்தது.

அந்தப் பொறி வைக்கப்பட்டிருந்த கோழிக் கூட்டை சுட்டிக்காட்டிய நரி, ''அதற்குள் மெதுவாகப் போனால் பெரிய சுண்டெலி அகப்படும்'' என்று ஆசை காட்டியது.

முட்டாள் பூனை கோழிக்கூட்டுக்குள் விரைந்து பொறிக்குள் அகப்பட்டுக்கொண்டது. பெரும் குரலில் சிரித்தபடி நரிஓடித்தப்பியது.

''சிங்கத்திடம் என்னை அழைத்துப் போக எவராலும் முடியாது'' நரி எக்காளம் போட்டது.

மறுநாள் காலையில் பூனை பொறியிலிருந்து விடுதலை பெற்றது. எனினும் அது நரியைப் பார்ப்பதற்காக மீண்டும் செல்லவில்லை.

நரியின் செயற்பாடுகளை எவராலும் நிறுத்த முடியவில்லை. எப்போதும்போல அது மற்ற மிருகங்களின் உணவையும் அபகரித்து வந்தது. எனினும் எவரும் அதனுடன் பேசுவதில்லை. அதற்கு நல்ல நண்பர்களும் இல்லை. எனினும் அது எல்லாரையும் பார்த்து சிரித்தபடி தனது பாதையில் தொடர்கிறது...

*

– தமிழாக்கம்: இளையவன் –


# சுந்தரன் சிரிகதைப் போட்டி-I

## பரிசு ரூபா 200/-

சுந்தரனில் ஒரு பக்கம் அடங்கக்கூடிய நகைச்சுவைக் கட்டுரை ஒன்றிற்குப் பரிசு வழங்கப்படும். மேலும் பிரசுரமாகும் ஒவ்வொரு கட்டுரைக்கும் சன்மானம் உண்டு. பரிசுக்குரிய கட்டுரையினை நடுவர்கள் தேர்ந்தெடுப்பர். பரிசுக்குரிய கட்டுரைக்கு ரூபா 200/- வழங்கப்படும்.

கட்டுரையில் எந்த நபரையும், வேதனைப்படுத்துவதாகவோ, அரசியல் கலந்ததாகவோ இருத்தல் கூடாது. பின்வரும் முகவரியைக் கத்தரித்து ஒட்டி அனுப்புதல் வேண்டும்.

252, பருத்தித்துறை வீதி,<br>
நல்லூர்,<br>
யாழ்ப்பாணம்.


– ஹைகூ

அரசனுக்குக்கூட<br>
தொப்பி எடுத்து வணங்குவதில்லை<br>
வயற்காட்டுப் பொம்மை

– டான்குய்

நைல்நதி கரையில் நியூபியா என்ற இடத்தில் ஒரு பெரிய மலையை குடைந்து இரண்டு கோயில்கள் அமைக்கப்பட்டிருந்தன. இந்த புகழ் பெற்ற கோயில்களை 'அபுசிம்பெல்' ஆலயங்கள் என்பர். இவை சுமார் 3200 ஆண்டு களுக்கு முன்னர் நைல் நதி கரை நாகரீகங்கள் செழித்து ஓங்கிய காலவேளையில் அமைக்கப் பட்டவையாகும். இந்த மலைக்குன்று மணல், கல்லினரல் ஆக்கப்பட்டு இருந்தமையினால் இக்கோயில் சிற்ப வடிவங்களை வெகு இலகுவாகவும் நேர்த்தியாகவும் பொழிந்து எடுப்ப தற்கு அக்கால மக்களினால் முடிந் திருக்கிறது.

நைல் நதிக்கரையில் நியூபியா மலைக் குன்றில் எகிப்திய மன்னன் 'ராம்சி' என் பவனால் அமைக்கப்பட்ட ஆலயங்கள் ...

'அஸ்வான்' நீர்த்தேக்கத்தினுள் இந்த 'அபுசிம்பெல்' ஆலயங்கள் அமிழ்ந்து விடாது எவ்வாறு காப்பாற்றப்பட்டன?

# அபுசிம்பெல் ஆலயங்கள்

நியூபியா மலைக்குன்றில் இந்த இரண்டு கோயில்களை அமைப்பித்தவன் எகிப்தின் மாபெரும் மன்னனாக விளங்கிய இரண்டாவது 'ராம்சி' ஆவான். கி. மு. 1200 ஆம் ஆண்ட ளவில் இந்த இரண்டு கோயில்களும் குடையப் பட்டன. உலகில் வேறு எங்கும் இல்லாத வகையில் மலையை குடைந்து எடுத்து இரண்டு கோயில்களை அமைக்க அவன் விரும்பினான். ஒரு கோயில் அவனுடைய நினைவாக அமைக் கப்பட்டது. மற்றைய கோயில் அவனது மனை வியும் எகிப்தியசக்கரவர்த்தினியுமான நீபேராறி (Neferteri) என்பவளின் நினைவாக அமைக் கப்பட்டது. அவனுடைய நினைவு கோயிலின் வாயிலில் 130 அடி அகலமும், 100 அடி உயர மும் கொண்ட நான்கு பாரிய சிலைகள் இந்த மலையில் செதுக்கப்பட்டுள்ளன. இவை நான்கும் ரர்ம்சி மன்னன் வெவ்வேறு அலங்காரங்களுடன் அமைத்து இருப்பது போன்ற காட்சியைத் தருகின்றன. இதில் ஒரு சிலையில் தலைப்பாகமும், மார்புப்பாகமும் இன்று காணப் படவில்லை. காலத்தின் அழிவுகளுக்கு அது உட்பட்டுவிட்டது. அவனுடைய மனைவியினு டைய கோயிலின் வாயிலில் அவன் (மனைவியி னுடைய வடிவம் சிலை ரூபமாக செதுக்கப்பட் டுள்ளது. வாயிலில் அமைந்த நன்நான்கு சிலை களுக்கும் இடையில் ஓர்புறம் இரண்டு சிலைகள் வீதம் அமைந்த இடைவெளியில் கோயிலுக் கான பிரதான வாயில் அமைந்து இருக்கின்றது. இந்த வாயிலின் ஊடாக உள்ளே நுழைந்தால் சிற்ப வேலைப்பாட்டுடன் கூடிய பெரியதொரு ஆலயம் அமைந்திருப்பதனை காணலாம். சுவர் களும் கூரைகளும் சிற்ப வடிவங்களினால் அலங் கரிக்கப்பட்டுள்ளன.

இந்த இரண்டு ஆலயங்களும் நைல்நதி கரையில் 1960 ஆம் ஆண்டு வரை ஊர்காண் பயணிகளின் கவனத்தை கவரும் வகையில் அமைந்திருந்தன. நைல்நதியில் படகுகளில் பயணம் செய்வோர் தமது படகுகளை அந்த ஆலய முன்றலில் நிறுத்தி அந்த கோயிலைத் தரிசித்துச் செல்வர். 1960 ஆம் ஆண்டளவில் நைல்நதியில் பாரிய அணை ஒன்று கட்டப் பட்டு பெரியதொரு நீர்த்தேக்கம் உருவாக்கு வதற்கு திட்டம் வகுக்கப்பட்டது. இதனை 'அஸ்வான்' நீர்த்தேக்கம் என்பர். நைல்நதியில் இந்த நீர்த்தேக்கம் உருவாக்கப்படுவதனால் தேங்குகின்ற நீரினுள் இந்த 'அபுசிம்பெல்' ஆலயங்கள் அமிழ்ந்து மூழ்கி விடும் அபாயம்

முரண்பாட்டைக்கண்டு ஒதுங்கிச் செல்பவர்கள் யாவருமே கோழைகள்

\- பெர்னாட்ஷா

ஏற்பட்டது. ஆகஸ்ட் மாதத்தில் அல்லது செப்டெம்பர் மாத தொடக்கத்தில் எதியோப்பியாவில் பெய்கின்ற மழை வீழ்ச்சியை பொறுத்து நைல்நதி பெருக்கு எடுப்பது வழக்கம். அக்கால வேளையில் வெள்ளத்தின் மட்டம் அபுசிம்பெல் ஆலயத்தின் சிலைகளை அமைத்திருக்கும் ராம்சி மன்னனுடைய பாதங்களை தொட்டு செல்லும். ஆனால் அஸ்வான் அணை அமைப்பினால் தேங்குகின்ற நீரினுள் அபுசிம்பெல் ஆலயங்கள் என்ற இந்த கலா பொக்கிசம் மூழ்கி அழிந்து விட இருந்தது.

இந்த ஆலயங்களை எப்படியாவது நீரினுள் மூழ்காது காப்பாற்றிவிடவேண்டுமென எகிப்திய அரசும் ஊர்காண் பயண நிறுவனங்களும் விரும்பின.

இந்த ஆலயங்கள் அமைந்துள்ள நியூபியா மலைக்குன்று மென்மையான மணல், கல்லால் ஆனது. அதனால் வன்மை குன்றியதாகவும், நீர் உட்பொசியக் கூடிய நுண்துளைகளை கொண்டதாகவும் காணப்படுகின்றது அவை இன்று காணப்பட்ட இடத்திலேயே பாரிய சுவர்களை அமைப்பதன் மூலம் நதியின் பெருக்கு நீரை உட்செல்லவிடாது தடுக்கலாம் என சிலர் அபிப்பிராயம் தெரிவித்தனர். சிலர் இந்த அபுசிம்பெல் ஆலயங்கள் அரிப்புக்கு உட்படாதவாறு, தக்க இரசாயனப் பொருட்களினால் சாந்து பூசப்பட்டு நீரினுள் அமிழவிடப்பட வேண்டுமென்றும் ஊர்காண் பயணிகள் நீரினுள் சென்று இந்தக் கோயிலை பார்வையிடலாம் என்றும் தெரிவித்தனர். இதனை ஓர் பிரித்தானியர் முன்மொழிந்தார். இதற்கு மாறாக ஓர் பிரான்ஸ் பொறியியலாளர் இந்த அபுசிம்பெல் கோயில்களை சுற்றி ஓர் பெரிய அணை ஒன்றைக் கட்டி தண்ணீர் உட்புகவிடாது பேணலாம் என்று கருத்துத் தெரிவித்தனர். சர்வதேச மாணவர்குழு ஒன்று நைல்நதியின் பாதையை மாற்றி அமைப்பதன் மூலம் இந்த கோயில்களை பாதுகாக்கலாம் என்று கருத்து தெரிவித்தனர்.

இதில் இரண்டு விடயங்கள் முக்கியமானவை:

1) அஸ்வான் அணையைக் கட்டி பாரிய நீர்த் தேக்கத்தை உருவாக்குவதன் மூலம் எகிப்தின் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கும், நீர்மின் உற்பத்தியை அபிவிருத்தி செய்வதும் என்பதாகும்.

2) இந்த அஸ்வான் அணையைக் கட்டுகின்ற அதேவேளையில் எகிப்திய புராண கலைச் சின்னங்களான இந்த இரண்டு கோயில்களையும் எப்படியும் பாதுகாத்துவிட வேண்டுமென்ற விருப்பம்.

நடப்பவை எல்லாவற்றையும் நீ புரிந்துகொண்டு விட்டதாக எண்ணினால் நீ மிகுந்த குழப்பம் அடைந்திருக்கிறாய்.

If you are Sure you understand everything that is going on you are hopelessly Confused.

- WALTER MONNAL

திட்டங்கள் பலவும் ஆராயப்பட்டு இறுதியில் எகிப்திய அரசும், யுனெஸ்கோவும் 1961 இல் ஓர் முடிவுக்கு வந்தனர். இந்தக் கோயில்கள் அமைந்துள்ள மலைக்குன்றினைத் திணிவு திணிவாக வெட்டி எடுத்து வேறு ஓர் இடத்திற்கு கொண்டுசென்று அவற்றை மீண்டும் பொருத்தி பழைய கோயிலை உருவாக்குவது என முடிவு செய்தனர். இவ்வாறு இந்த மலையை வெவ்வேறு திணிவுகளாக வெட்டி நைல்நதி கரையில் இருந்து 200 அடி உயரத்திற்கு மேற்பட்ட இன்னோர் இடத்தில் அமைப்பதற்கு 90மில்லியன் டொலர்கள் பணம் தேவை என மதிப்பீடு செய்தனர். இந்தப் பணிக்கு உலகின் பல நாடுகள் நன்கொடை வழங்க முன்வந்தனர். இவ்வேலையை பொறுப்பேற்ற பொறியியலாளர்கள் 1962 மே மாதத்திற்குள் இந்த கோயில் இடமாற்றம் செய்யப்படாவிட்டால் நைல்நதியினுள் அவை மூழ்கிவிடும் அபாயம் உண்டு என கூறினர். ஏனெனில் அஸ்வான் அணை துரிதமாக கட்டி முடிக்கப்பட்டு நீர் தேங்குகின்ற நிலையை அடைந்துகொண்டு இருந்தது. இந்த வேளையில் சுவிடிஸ் கம்பனி ஒன்று இந்த கோயிலை திணிவு திணிவாக அரிந்து 30 தொன் நிறை உள்ள துண்டங்களாக வெட்டி இடமாற்றம் செய்வதற்கு முன்வந்தது. அந்த நிறுவனம் இதனை செய்துமுடிக்க 90 மில்லியன் டொலர்களுக்குப் பதிலாக 36 மில்லியன் டொலர்களை கேட்டது. அத்தோடு இரண்டு ஆண்டுகளுக்குள் இதனை

என்பிரிய இளைஞனே!
நான்தான் இறைவன்
புத்தாண்டின் - உன்
புதுவரவிற்காக பார்த்திருப்பேன்
வாழ்த்துக்கூறி வரம்தர!
வரும்போது வழியிலொரு
தவம் இருப்பாயா?

# புத்தாண்டு - தவம் - வரம்.

- சஞ்சயன்

இயற்கை வரைந்த
முதுமைச் சித்திரங்கள்!

மண்ணோக்கி வரவு கேட்கும்
மரணத்தின் நெருக்கங்கள்!

பணமுடிச்சு அவிழ
அதில் பதுங்கிய உறவுகளை
தொலையவிட்ட ஏமாளிகள்!

நிமிஷவாழ்வில் உயிர்தூங்கும்
உன் எதிர்கால
நினைவுச் சின்னங்கள்!

உன் உச்சரிப்பில்
'கிழடுகள்'

அங்கே,
கொஞ்சம் குனிந்து
'சுகமா' என்றொரு சொல்லை
காதுவழியே நெஞ்சுக்குள்
காட்டிவிட்டு வா!
உனக்காக காத்திருப்பேன்.

●

தாய்ப்பாலை நெஞ்சுக்குள்ளும்
நினைத்தறியா பாலன்கள்!

பாச ஊற்றின்றி
உயிர்வாடும் இளங்கதிர்கள்

ஏக்கப்பார்வையால்
இரும்பையும் எரித்துருக்கும்
சின்ன சின்ன மழலைகள்

அனாதைப்பட்டிக்குள்
அடைபட்டு கிடக்கும்
கன்றுக்குட்டிகள்!

அங்கே
அன்புச் செல்வங்களே
என்றொரு முத்தம்
விட்டுவிட்டுவா!
உனக்காக காத்திருப்பேன்.

●

நித்தம் அமாவாசையை
நெஞ்சுக்குள் சேமிக்கும்

இயற்கை ஓவியத்தை
இருளென்றே வாசிக்கும்

ஊனக்கண்களை
உதிரவிட்ட சோதரர்!

புதுவருடம்
பிறப்பதும் இறப்பதும்
பிரித்தறியா ஞானிகள்!

உன் கைக்குலுக்கின்
கனம்காண காத்திருப்பர்!

அங்கே,
வெள்ளைப்பிரம்பு பற்றி
ஒருமுறை விசாரித்துவிட்டு வா!
உனக்காக காத்திருப்பேன்.

●

மனத்தில் ஈரமில்லான்
மண்ணில் தூக்கி வீசிய
மனவளர்ச்சி குன்றிய
மழலைகள் - மகத்துவங்கள்!
உன்முகம் பார்த்து
தவிக்கிறார்கள்.

ஒரு மகிழ்ச்சியை
அங்கே உதிர்த்து விட்டுவா!
உனக்காக காத்திருப்பேன்.

●

அங்கவீனங்களால்
மனம் நொந்த மனிதர்கள்

சமூகத்தின் சேராது ஒதுங்கும்
விளைநிலங்கள்

அங்கே
நம்பிக்கை வித்தொன்றை
நட்டுவிட்டு வா!
உனக்காக காத்திருப்பேன்.

●

பச்சைத்தண்ணியில்
பத்தியம் காப்பவர்!

வறுமை ஒன்றையே - மாத
வருமானமாய் கண்டவர்!

பிறக்கும் வருடத்திற்கு
வாழ்த்துச் சொல்லவும்
வார்த்தை அற்றவர்

சீவிமுடித்து சிங்காரித்து
புத்தாடையோடு - நீ
புதுப்பவனி வரும்போது
வேலிப் பொட்டுக்குள் - உன்
விசித்திரம் பாக்கும்
வேற்றுவாசிகள்!

அந்த வேலிஓர நெஞ்சங்களில்
துணிச்சல் வேறொன்றை
தூவிவிட்டு வா!
உனக்காக காத்திருப்பேன்,

●

என்பிரிய இளைஞனே!
ஆலயம் வந்தாயா?
வா!
வரும்வழி எல்லாம்
கருணைத்தவம் காத்தாயா?
வா... நான்தான் கடவுள்
உள்ளேதான் இருக்கிறேன்!

இல்லை,
சுயநலக் கல்லறைக்குள்
உயிர்ப்பிணமானாயோ
உள்ளே போ...
கற்பாறைகள்
உனக்காக காத்திருக்கின்றன.

பொருத்தும் பொழுது அவை சரியான நிலையில் பொருத்தவேண்டும் என்பதற்கு மிக அவதான மாக அவை இலக்கம் இடப்பட்டன. இவ்வாறு வெட்டிய துண்டங்களைப் பாரம் தூக்கிகள் மூலம் தூக்க நேர்ந்தது. இந்தக் கோயிலின் கல் துண்டங்களில் உருக்குக் கயிறுகளைப் பொருத்தி தூக்கினால் சிலவேளைகளில் அவற்றின் உராய் வினால் அவற்றிலுள்ள சிற்பங்கள் சிதை வடைந்துவிடும் வாய்ப்பு உண்டு, எனவே ஒவ் வொரு கல் துண்டத்தின் மேற்புறத்தில் இருந்து ஒன்று அல்லது 2 மீற்றர்கள் கீழே துளைகள் இட்டு அவற்றுள் வலுவான இரும்புக் கம்பிகளை பொருத்தி அந்த கம்பியில் பொருத்தத்தக்க கொழுக்கிகளை கொண்டு வெகு அவதானமாக அவற்றை தூக்கி பாரிய மோட்டார் லொறி களில் ஏற்றி அவற்றை புதிய கோயில் நிறுவப் படும் இடத்திற்கு கொண்டு சென்றனர்.

1970 ஆம் ஆண்டு மே மாதம் இந்த பழைய கோயிலை மீண்டும் அதே வடிவில் அமைத்து முடிக்கின்ற பணி நிறைவுபெற்றது. நியூபியா பிரதேசத்தில் நைல்நதி கரையில் காணப்பட்ட இந்த பாரிய மலையை அரிந்து, அவ்வாறே பெயர்த்தெடுத்து அது தனக்குள் புதைத்து வைத்திருந்த கோயிலின் சிதைவடையா வடிவத் தோடு மீண்டும் ஓர் இடத்தில் அமைக்கப்பட் டமை உண்மையிலேயே ஓர் வியத்தகு செயல் ஆகும். 3200 ஆண்டுகளுக்கு முன் எகிப்திய சக்கரவர்த்தி அமைத்த இந்தக் கோயில் வியப் பானது அன்று; அதனை அகழ்ந்தெடுத்து தொடக்கநிலை சிறிதும் குலையாது மீண்டும் அமைத்த செயலே வியப்பிற்குரியதாகும்.

□ ○ □

# இயல்புமாறுமா?

- குட்டிக்கதை

ஒரு தேள் இருந்தது. அதற்கு நீந்தத் தெரியாது. அது ஓர் ஆமையிடம் போய், ''என்னைக் கொஞ்சம் சுமந்துகொண்டு போய் அக்கரையில் விடுகிறாயா?'' என்று கேட்டது.

ஆமை திடுக்கிட்டு ''என்ன, உனக்குப் பைத்தியமா! உன்னைச் சுமந்துகொண்டு நீந்தும் போது நீ என்னைக் கொட்டிவிடுவாய். நான் மூழ்கிப்போவேன். நான் மாட்டேன். உன்னைச் சுமக்கமாட்டேன்'' என்றது.

தேள் சிரித்துக்கொண்டு, ''என் அன்பார்ந்த ஆமையே, என்ன இது! இப்படி அசட்டுத்தன மாய்ப் பேசுகிறாயே; நான் கொட்டி நீ மூழ்கி னால் நானும்தானே மூழ்குவேன்! அப்படிச் செய்வேனா? அது பகுத்தறிவுற்கும் தர்க்கத்துக் கும் பொருந்துமா?'' என்று கேட்டது.

ஆமை யோசித்தது.

'' உண்மைதான் '' என்றது. ''என்மேல் தாவு'' என்று தேளை அழைத்தது.

அதைச் சுமந்துகொண்டு, ஆற்றில் நீந்தியது. இப்படி நடு ஆற்றில் போய்க்கொண்டிருக்கும் போது ''சுறுக்'' என்று பலமாக ஆமையின் தலையில் ஒரு கொட்டுக் கொட்டியது தேள்.

அப்படியே பதறிப்போன ஆமையும், அதன் முதுகிலே தேளுமாக இரண்டும் நீரிலே முழுகத் தொடங்கின.

அப்போது விதியை நொந்தபடி, ''தேளே, ஒரு சந்தேகம் கேட்கிறேன், சொல்வாயா? உன்னைச் சுமந்திருக்கும்போது என்னை நீ கொட்டுவது பகுத்தறிவுக்கும் தர்க்கத்துக்கும் பொருந்தாது என்று நீயே சொன்னாயே! அப்படியிருக்க ஏன் கொட்டினாய்'' என்று கேட்டது.

மூழ்கிக்கொண்டிருந்த தேள் துக்கத்தோடு ''நான் கொட்டுவது என்ற விஷயத்துக்கும் பகுத்தறிவுக்கும் தர்க்கத்துக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை. அது என் குணம்'' என்றது.

– தி இங்கிலீஷ் டைஜெஸ்ட்

என்பிரிய இளைஞனே!
நான்தான் இறைவன்
புத்தாண்டின் - உன்
புதுவரவிற்காக பார்த்திருப்பேன்
வாழ்த்துக்கூறி வரம்தர!
வரும்போது வழியிலொரு
தவம் இருப்பாயா?

# புத்தாண்டு - தவம் - வரம்.

- சஞ்சயன்

இயற்கை வரைந்த
முதுமைச் சித்திரங்கள்!

மண்ணோக்கி வரவு கேட்கும்
மரணத்தின் நெருக்கங்கள்!

பணமுடிச்சு அவிழ
அதில் பதுங்கிய உறவுகளை
தொலைவிட்ட ஏமாளிகள்!

நிமிஷவாழ்வில் உயிர்தூங்கும்
உன் எதிர்கால
நினைவுச் சின்னங்கள்!

உன் உச்சரிப்பில்
'கிழடுகள்'

அங்கே,
கொஞ்சம் குனிந்து
'சுகமா' என்றொரு சொல்லை
காதுவழியே நெஞ்சுக்குள்
காட்டிவிட்டு வா!
உனக்காக காத்திருப்பேன்.

●

தாய்ப்பாலை நெஞ்சுக்குள்ளும்
நினைத்தறியா பாலன்கள்!

பாச ஊற்றின்றி
உயிர்வாடும் இளங்கதிர்கள்

ஏக்கப்பார்வையால்
இரும்பையும் எரித்துருக்கும்
சின்ன சின்ன மழலைகள்

அனாதைப்பட்டிக்குள்
அடைபட்டு கிடக்கும்
கன்றுக்குட்டிகள்!

அங்கே
அன்புச் செல்வங்களே
என்றொரு முத்தம்
விட்டுவிட்டுவா!
உனக்காக காத்திருப்பேன்.

●

நித்தம் அமாவாசையை
நெஞ்சுக்குள் சேமிக்கும்

இயற்கை ஓவியத்தை
இருளென்றே வாசிக்கும்

ஊனக்கண்களை
உதிரவிட்ட சோதரர்!

புதுவருடம்
பிறப்பதும் இறப்பதும்
பிரித்தறியா ஞானிகள்!

உன் கைக்குலுக்கின்
கனம்காண காத்திருப்பர்!

அங்கே,
வெள்ளைப்பிரம்பு பற்றி
ஒருமுறை விசாரித்துவிட்டு வா!
உனக்காக காத்திருப்பேன்.

●

மனத்தில் ஈரமில்லான்
மண்ணில் தூக்கி வீசிய
மனவளர்ச்சி குன்றிய
மழலைகள் - மகத்துவங்கள்!
உன்முகம் பார்த்து
தவிக்கிறார்கள்.

ஒரு மகிழ்ச்சியை
அங்கே உதிர்த்து விட்டுவா!
உனக்காக காத்திருப்பேன்.

●

அங்கவீனங்களால்
மனம் நொந்த மனிதர்கள்

சமூகத்தின் சேராது ஒதுங்கும்
விளைநிலங்கள்

அங்கே
நம்பிக்கை வித்தொன்றை
நட்டுவிட்டு வா!
உனக்காக காத்திருப்பேன்.

●

பச்சைத்தண்ணியில்
பத்தியம் காப்பவர்!

வறுமை ஒன்றையே - மாத
வருமானமாய் கண்டவர்!

பிறக்கும் வருடத்திற்கு
வாழ்த்துச் சொல்லவும்
வார்த்தை அற்றவர்

சீவிமுடித்து சிங்காரித்து
புத்தாடையோடு - நீ
புதுப்பவனி வரும்போது
வேலிப் பொட்டுக்குள் - உன்
விசித்திரம் பாக்கும்
வேற்றுவாசிகள்!


அந்த வேலிஓர நெஞ்சங்களில்
துணிச்சல் வேறொன்றை
தூவிவிட்டு வா!
உனக்காக காத்திருப்பேன்,

●

என்பிரிய இளைஞனே!
ஆலயம் வந்தாயா?
வா!
வரும்வழி எல்லாம்
கருணைத்தவம் காத்தாயா?
வா... நான்தான் கடவுள்
உள்ளேதான் இருக்கிறேன்!

இல்லை,
சுயநலக் கல்லறைக்குள்
உயிர்ப்பிணமானாயோ
உள்ளே போ...
கற்பாறைகள்
உனக்காக காத்திருக்கின்றன.

# நல்லார்



# ஒருவர்

இந்திய அமைதிப் (?) படை யாழ்ப்பாணக் குடாநாட்டிலே தனது திக்விஜயத்தைக் கோலாகலமாக நடத்திக் கொண்டிருந்த வேளை; இராமதூதுவனான அனுமனை நினைவுபடுத்தும் வகையிலே யாழ்ப்பாண தகனம் மிகுந்த கடமை உணர்ச்சியோடு அந்தப் படையினரால் மேற்கொள்ளப்பட்டு வந்த காலம்! வீதிகள் வெறிச்சோடி, வீடுகள் இடியுண்டு கிடக்க, தமது வெப்பிசாரத்தினை இந்த மண்ணின் மக்கள் வெளிப்படுத்த முடியாது அடங்கி ஒடுங்கியிருந்த நாள்கள்!

## - சொக்கன் -

அந்தக் காலத்தில் ஒரு நாள் ஆசிரியர் ஒருவர் அதிகாலைப் பொழுதில் யாழ். நகரிலிருந்து தமது கிறவல் மிதிவண்டியிலே வியர்க்க விறுவிறிக்கப் பயணித்துத் தாவடியைச் சென்றடைகின்றார். கையும் வறண்டு மனமும் நலிந்து தாம் செல்லும் இடத்திலே வரவேற்பு எவ்வாறிருக்குமோ என்ற தயக்கத்துடனும், தாம் எதிர்பார்ப்பது கிடைக்குமோ என்ற ஐயத்துடனும் அவர், அந்த வீட்டுப் படலையைத் திறந்து முற்றத்திலே காலடி எடுத்து வைக்கிறார்.

''வாருங்கோ மாஸ்டர்! வாருங்கோ! பல்லில்லாத வாயிலிருந்து கல்மஷமேயில்லாத கனிந்த உள்ள உணர்ச்சியை வெளிப்படுத்தி வரவேற்கிறார் வீட்டின் தற்கால வாசியான முதியவர். ஆம் அது அவரின் தற்கால வாசஸ்தலந்தான் மாளிகை போல் வசதி நிறைந்த தமது இல்லத்தையும் அள்ளக் குறையாத அமுத சுரபிகளான தமதுபுத்தகசாலை, அச்சகத்தையும் பூட்டி விட்டுத் தம் உறவினரான ஒருவரின் வீட்டில் ஒண்டியிருக்க வேண்டிய நிலை அவருக்கு!

ஆனால், முகமலர்ச்சிக்கும், மனஎழுச்சிக்கும் ஒறுப்பனவு இல்லாத அந்தப் பெருமகனின் வரவேற்பு, ஆசிரியரின் தயக்க ஐயங்களைப் போக்கி விட அவர் மிதிவண்டியை ஒருபக்கமாக நிறுத்தி விட்டு உள்ளே சென்று நாற்காலியில் அமர்கிறார்.

பலதும் பத்தும் பேசப்படுகின்றன. ஆசிரியரின் கவலைகள் ஷெல்வீச்சின் முன் அகப்பட்ட மனித உடல்களாய்ச் சிதறி இருந்த இடம் தெரியாது மறைந்து போகின்றன. எனினும் தாம் வந்த நோக்கத்தை இன்னமும் வெளிப்படுத்தும் நிலைக்கு அவர் தயாராகவில்லை.

ஆனால் முகம்பார்த்து அகத்தைப் படிக்கும் திறனுடைய அந்த முதுபெருமகனுக்கு ஆசிரியரின் வரவின் நோக்கம் தெற்றெனப் புலப்பட்டு விடுகின்றது.

''மாஸ்ரருக்குக் காசு தேவைப்படுகிறது போலை'' என்று அவரே விடயத்துக்கு வந்து விடுகின்றார்.

''ஓம் ஐயா, அதுக்குத்தான் வந்தனான். என்னுடைய புத்தகங்களுக்கு கணக்குப் பாத்து ஒரு சதமும் பாக்கியில்லாமல் தீத்துவிட்டீர்கள். இப்ப இருக்கிற நிலையிலை தொடர்ந்து வழிகாட்டி நூல்கள் வெளியிடுங்காலம் எப்போது வருமோஎண்டு தெரியாது.

## உலகில் மிக உயரமான பெண்

கனடாவில் வாழ்ந்துகொண்டிருக்கும் மிக உயரமான பெண்மணி சாண்டி அலனானின் உயரம் 7 அடி 7.25 அங்குலம். எடை 210 கிலோ. இதற்குமுன் (1964-82) சீனாவில் சான்சூங் வின்னி ஜானிள் உயரம் 8 அடி 1.75 அங்குலம் இவர் இறந்துவிட்டார்.

கொஞ்சம் காசு கடனாய்க் கேட்கலாம் எண்டுதான் வந்தனான்'' ஆசிரியர் தயங்கித் தயங்கிச் சொல்கிறார்.

''பாக்கி, கடன் எண்டதெல்லாம் பிறகு பாப்பம். இப்ப உங்களுக்கு எவ்வளவு காசு தேவைப்படும்? அதைச் சொல்லுங்கோ'' என்கிறார் பெரியவர்.

''ஒரு ஐயாயிரம் ரூபா .. சம்பளம் வந்தவுடனை '' இழுக்கிறார் ஆசிரியர்.

பெரியவருக்குச் சிரிப்பு வருகிறது ''ஐயாயிரம் எந்த மூலைக்கு? பத்தாயிரமாய்த் தாறன், கொண்டுபோங்கோ'' என்று தொடர்ந்த சிரிப்போடு சிரிப்பாய்ப் பெரியவர் சொல்ல, ஆசிரியருக்குத் தமது செவிகளையே நம்பமுடியவில்லை. கேலியா, உண்மையா என்று தீர்மானிக்கவும் கூடவில்லை.

ஆனால் அவர் யோசித்து முடிவு சொல்லும் வரை பெரியவர் அங்கு நிற்கவுமில்லை. சில நிமிடங்களில் காசும் கையுமாக வந்து, ஆசிரியரிடம் அதைக் கையளிக்கின்றார்.

''வடிவாய் எண்ணிப் பாருங்கோ... கிழிஞ்ச தாள் ஏதாவதிருக்கோ எண்டு. பாத்திட்டு

இந்த வண்ணக் கிண்ணத்தில்
மலர்களை வைப்போம்
அரிசிதான் இல்லையே

- பாஷோ

இந்த என்வலப்புக்குள்ளை வைச்சு, இந்த றபர்பான்றைக் கொண்டு சுத்திக் கவனமாய்க் கொணடு போங்கோ''.

ஆசிரியரின் இதய நன்றி கண்களில் துளிக்கின்றது. ''எப்ப இதைத் திருப்புவேனோ தெரியேல்லை'' என்று தளுதளுக்கிறார். பெரியவர் அவரின் தோளில் தட்டி, ''உதெல்லாம் ஆறுதலாய்ப் பாப்பம். இப்ப உங்கடை நெருக்கடியைத் தீருங்கோ'' என்கிறார்.

''மனிதன் என்பவன் தெய்வமாகலாம்'' என்ற திரைப்படப் பாடல் அடிதான் ஆசிரியருக்கு அந்த நேரத்தில் நினைவில் நிழலிடுகின்றது.

இந்த இருபதாம் நூற்றாண்டில் இப்படி ஒருவரா? என்ற வியப்பு வியப்பாகவே ஆசிரியரின் நெஞ்சில் தங்கிவிடுகின்றது. தொடர்ந்து தேநீர் உபசாரம், ஆறுதல் மொழிகள், அறிவுரைகள் என்பன பெரியவரின் பண்புக்குக் கட்டியம் கூற வணக்கமும் நன்றியுமாக ஆசிரியர் விடைபெற்று வீடு திரும்புகின்றார்.

இந்தச் சம்பவம் கற்பனையல்ல. உண்மையில் நடந்தது. பெரியவர் வேறு யாரும் அல்லர். ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, அச்சகம் என்பவற்றின் முன்னாள் உரிமையாளரான அமரர் ஆறுமுகம் சுப்பிரமணியம் அவர்கள்தாம். அவரின் பரந்து, விரிந்து, பரிந்த உள்ளத்தைத் தரிசிக்கும் பெரும்பேற்றினைப் பெற்றவனும் வேறு ஒருவனும் அல்லன். நானேதான்.

அமரர் சுப்பிரமணியம் அவர்களோடு பழகியவர்களுக்கும் அவரோடு தொடர்பு வைத்திருந்தவர்களுக்கும் இந்தச் சம்பவம் எவ்வித

இடிந்த வீட்டின் அருகே
பூத்து நிற்கும் கனிமரம்...
பழைய போர்க்களம்

- ஷின்

வியப்பையும் உண்டாக்காது என்பது சர்வநிச்சயம். அவர்களைக் கேட்டால் இத்தகைய சம்பவங்கள் 'ஒன்றா, இரண்டா எடுத்துச் சொல்ல'' என்று பாடவே தொடங்கி விடுவார்கள், என்பதற்கும் எவ்வித ஐயமும் இல்லை.

''பழமரம் நாடும் பறவைகள் போல'' அவரை நாடிச்சென்று, பாடநூல் வழிகாட்டிகள் எழுதிக்கொடுத்துப் பயன்அடைந்தவர்கள் என்போல இன்னும் பலர். அவரின் நேர்மை, நிதானம், பரந்த உள்ளம், பரிவு என்பனவற்றிற்கு நிலைத்த சாட்சிகளாய் அவர்கள் இன்றும் வாழ்ந்து வருகிறார்கள்.

நூலின் தேவை, தரம் என்பவற்றைத் தமது பட்டறிவு கொண்டு முடிவு செய்து குறைந்தது 2000 பிரதிகளிலிருந்து 3000 பிரதி வரை ஒரு தடவையில் வெளியிடுவது அவர் வழக்கமாய் இருந்தது. நூல் விற்பனை தமது முதலுக்குப் பழுதின்றி வத்த சூட்டோடு சூடு கணக்குப் பார்த்து வெளியிட்ட பிரதியின் மொத்த விலையிலிருந்து 20%த்தினை நூலாசிரியருக்கு வழங்கி வந்தார். காசுக்கு நடையாய் நடந்தோ, பல்காட்டி இரந்து பரிவைச் சம்பாதித்தோ நூலாசிரியரின் நடைமுறையாய் இருக்க அவர் இடமளித்ததேயில்லை. ''உங்கடை புத்தகங்கள் விற்காமல் தேங்கிக் கிடக்குது'' என்று சொல்லி நூலாசிரியரை ஏமாற்றி இரண்டாம் மூன்றாம் பதிப்புக்களை - பதிப்பு என்று போடாமலே அச்சடித்து விற்று - நூலாசிரியரின் வயிற்றில் அடிப்பதைக் கனவிலும் கருதாத கண்ணியம் சுப்பிரமணியத்தாரது அரிய பண்பாய் இருந்து. ஒவ்வொரு பதிப்பிற்கும் நூலுரிமையாளருக்குக் குறித்த 20% வழங்க அவர் தவறியதேயில்லை. ''கணக்கைத் திருங்கள்'' என்று நூலாசிரியர் கஸ்டப்படுத்த இடமளிக்காத, ஒரே

## -தட்டுங்கள் திறக்கப்படும்

### கேள்வி - பதில் பகுதி

வாசகர்களிடமிருந்து தரமான கேள்விகளை எதிர்பார்க்கின்றோம். தெரிந்தெடுக்கப்படும் கேள்வி ஒன்றிற்கு ரூபா 25/- வழங்கப்படும்.

'' அன்பு அறிவு அகமகிழ்வோடு
இன்புற்றிருப்போம் எல்லோரும் ''


நெறியாள்கை:

சொக்கன்
செங்கையாழியான்
சிவராமலிங்கம்

ஓவியம்: ரமணி

இணை ஆசிரியர்:
த. ஜெயசீலன்

ஆசிரியர்: கௌதமன்




'ஒரு வணிகர் அமரர் சுப்பிரமணியம் அவர்களே கொள்வதும் மிகை கொள்ளாது கொடுப்பதும். குறை கொடாது' வாணிப நேர்மையை பேணிய பெருந்தகை அவர். நானும் என்போல்வார் பலரும் அவரால் வாழ்ந்தோம், வாழ்கிறோம் என்று நெஞ்சை நிமிர்த்திப் பெருமையுடன் கூறும் நிலையிலே எங்களை அவர் வைத்துச் சென்றுள்ளார்.

அவர் அமரத்துவம் அடைந்தபின் அவரின் பேரனாரான திரு. தி. ஜெயராசா தொடர்ந்து அவரின் நெறியிலேயே எம்மை ஆதரித்து வருகின்றார் என்று மிகுந்த நன்றியுடன் கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன் சென்ற ஆண்டு அவர் வெளியிட்ட எனது இந்து நாகரிகம் - 3 என்னும் நூலை, அமரர் அவர்களுக்கு அன்புப்படையல்களாகப் படைத்து நான் எழுதிய பாடல் இது.

பழமரம் உள்ளூர்ப் பழுத்ததே போன்று
பரிவுடன் எம்மவர்க் குதவி
விழைவுடன் என்றும் இனியன கூறி
வேண்டிய வேண்டியாங் களித்துக்
குழைவுடன் என்றும் நினைத்திட வைக்கும்
குரிசிலாம் சுப்பிர மணியர்
எழிலுளம் வாய்த்த புரவலர்க் கிந்நூல்
என்னுடை அன்புசேர் படையல்.

''நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டெல்லார்க்கும் பெய்யும் மழை'' என்ற பொன்மொழியைப் பொய்யாமொழியாக்கிய பெரியாரை வாழ்வின் இறுதிவரை மறவாதிருப்பது தான் எம்போல்வாரின் நீங்காக் கடன்.

ஆண்டு 3, 4, 5 க்கான
பயிற்சிப் புத்தகங்கள்
வெளிவந்துவிட்டன!

ஸ்ரீ சுப்பிரமணிய
புத்தக சாலை

கே. கே. எஸ் வீதி - யாழ்ப்பாணம்

நுண்
அறிவியல்
I.Q.
இதழ் - 2 வெளிவந்துவிட்டது
பொது அறிவு,
பொது உளச்சார்பு ஏடு

ஆசிரியர்: கலாநிதி க. குணராசா
B.A. Hons (Cey.), MA, Ph. D.; SLAS,

துணை ஆசிரியர்கள்: ஆ. இராஜகோபால்
B.A, (Hons) Dip. in Ed.
திருமதி. கமலா குணராசா,
B. A. Dip, in. Ed, SLPS II

## பொது அறிவு

அதிவேக உயிரினம்: பால்கன். 45° சரிவாக கீழே குதிக்கும் வேகம் 350 கி.மீ/மணி. நீண்ட தூரம் பறக்கும் பொழுது இதுவே முதலிடம் பெறும். சிவப்புநிறக் கழுத்துள்ள மெர்கான்செர் என்ற பறவையின் வேகம் 129 கி.மீ./மணி

உயரமான மரம்: கலிபோர்னியாவில் உள்ள ''ஹம் போள்ட்டில்'' எனும் 112.1 மீட்டர் உயரமுள்ள ஒரு காத்தாடி வர்க்க மரம்.

தரையில் வாழும் மிகப்பெரிய விலங்கு: ஆப்பிரிக்கன் யானைதான் மிகப்பெரியது. இதன் சராசரி உயரம் 3.2 மீட்டர். எடை 6.5 டன்.

மிகப்பெரிய பூங்கா: கனடாவின் ஆல்பாட்டா வில் உள்ள ''வுட்பஃபெல்லோ நேஷனல் பூங்கா'' இதன் சுற்றளவு 45,480 ச.கி. மீட்டர்.

மிகக் கொடும் வறட்சி: சிலியில் உள்ள அட்டகாமா மறுபூமியில் 1971 க்கு முன் 400 வருடங்கள் வறட்சியாகவே இருந்தது.

மிகக் கொடும் குளிர்: அண்டார்டிக்காவில் '' குளிரின் துருவம் '' வருடசராசரிக் குளிர் 57.8. செல்சியஸ்.

மிகப்பெரிய கடல்: அமைதியான கடல் பசிபிக். இதன் பரப்பு 166,820,200 ச.கி.மீ. (மொத்த கடல் பரப்பில் 45.8%)

# 'சுந்தரன்' பொது அறிவுப் போட்டி - I

## பரிசு ரூபா 200/-

பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையெழுதி பரிசினை வெல்லுங்கள். உங்கள் விடைகளை ஒரு தாளிலேயே நிரப்பி 'சுந்தரன்' 252, பருத்தித்துறை வீதி நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 30-04-1998 க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவையுங்கள். உங்கள் கடித உறையின் மேல்பகுதியில் 'சுந்தரன்' பொது அறிவுப் போட்டி - I எனக் குறிப்பிடவும். ஒன்றிற்கு மேற்பட்ட சரியான விடைகள் கிடைக்கும் சந்தர்ப்பத்தில் எழுத்து, ஒழுங்கு, விடையளிக்கப்பட்டமுறை போன்றவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

1. 'சிரித்திரன் சுந்தரின்' முழுப்பெயர் என்ன?
2. 'ஆத்மானந்தன்' = 7 5 3 4 8 2 9 ஆயின்,
   'ஆனந்தன்' = ................. என்ன?
3. ஈபிள் கோபுரம் எந்த நாட்டிலுள்ளது?
4. களவு, கிளவு, வளவு, பிளவு இவற்றில் சேரமுடியாத சொல்யாது?
5. கொலம்பஸ் என்பவன் யார்?
6. செவ்வாயில் முதன்முதல் இறங்கிய வாகனம் யாது?
7. 'சுந்தரன்' சுதன் ஆயின், வசந்தன் என்ன வாகும்?
8. முன்னைய பரமேஸ்வராக் கல்லூரிக்கு என்னவாயிற்று?
9. 'சோலையம்மன் கோயில் எங்குள்ளது?
10. 'வெள்ளை மாளிகை அதனை ஏற்றுக்கொள்ளவில்லை'
    – இதில் வெள்ளை மாளிகை என்பது எதனைக் குறிக்கிறது?

ஆசிரியர்,

சுந்தரன்,

252, பருத்தித்துறை வீதி,
நல்லூர்
யாழ்ப்பாணம்

இச்சதுரத்தினை வெட்டி அனுப்ப மறவாதீர்கள்

எங்கும் ஒளிமயம்!

ஒரே குதூகலம்!

உங்கள் இல்லம் தோறும்

சந்தோஷம் இசைபாடும்!

அல்டிக்கு வாருங்கள் ஒருமுறை



ALDI அல்டி ALDI

அல்டி

T. V., DECH. CAZZETES RADIO, LIGHTS, IMPORTED COLOGNES. FANCY ITEMS.

75, Grand Bazzar Road, Jaffna.

கோடை வெயிலின் கொடுமை நீக்கி - குளிர்
ஓடை நீரின் குளுமை தந்திடும்

# லிங்கன்

## கிறீம் ஹவுஸ்

## LINGAN CREAM HOUSE

**உங்கள் கிறீம் ஹவுஸ்...**

பார்த்தாலே தாகம் திரும்! பசி தீரும்!!
பருகினால் ........!

நாவூறும் ஐஸ்கிறீம் வகைகள், றோல்ஸ், லட்டு, மிக்சர்
இறக்குமதி செய்யப்பட்ட பிஸ்கட், சொக்கிலெட், பழவகைகள்,
பீடா, விதவிதமான இனிப்பு வகைகள் இன்னும்... இன்னும்...!!!

119, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

119, Kasthuriar Road,
JAFFNA.

போஸ்கோ பதிப்பகம், 252, பருத்தித்துறை வீதி, நல்லூர்.